


கவிதா
5·00
உயிரின் உயிரே..
ஆர். மணிமால

# அன்னை தெரசா!



நீ பூமிக்கும்
[illegible]
நீ
[illegible]
[illegible]
நீ
[illegible]
[illegible]
[illegible]
நீ [illegible]
[illegible]
[illegible]
இருக்க வேண்டாம்..?
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
ஒரு நாளும்
இருக்க வேண்டாம்!
என்று உனது
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அப்படியே
உன் தொண்டுகள்
[illegible]

— [illegible]

[illegible]





# உயிரின் உயிரே...

— ஆர். மணிமாலா

"இளமை எனும் பூங்காற்று...
பாடியது ஓர் பாட்டு...
ஒரு பொழுதிலோர் ஆசை...
சுகம்... சுகம்... அதிலே... ஒரே சுகம்..."

[illegible]

[illegible]

விட்டிருந்தது. இவளுக்கு மதியம் தேர்வு என்பதால்... காலையில் வீட்டிலேயே இருந்து படித்தாள்.

படித்துக் கொண்டிருக்கிறாள் என்றுதான் நினைத்தாள் ஜனனி. இப்போதல்லவா தெரிகிறது பாடுகிறாள் என்று!

ஜனனிக்கு கோபத்தில் மூக்கு விடைத்தது. ஜன்னல் கதவில் விரல்களால் தட்டி ஒலியெழுப்பினாள். திடுக்கிட்டு எழுந்து பார்த்த மோகனா... அக்காவைப் பார்த்து திகைத்தாள்.

"இன்னைக்கு என்ன எக்ஸாம் மோகனா?"

"சயன்ஸ்!"

"சயன்ஸ்ல தமிழ் சினிமா பாட்டுப்பத்தியெல்லாம் கேள்வி கேக்கறாங்களா என்ன?"

"இ... இல்லேக்கா...!"

"அப்ப... பாடிட்டிருந்தியே..."

"______"

"இதப்பார் மோகனா! படிக்கப் பிடிக்கலேன்னா... பிடிக்கலேன்னு சொல்லிடு. கைகலை விட்டு நிறுத்திடறோம். பணமாவது மிச்சமாகும்."

"இ... இல்லேக்கா... நான் சும்மாதான் பாடிட்டிருந்தேன்." மோகனாவின் முகம் வெளிறிப் போயிருந்தது.

"சூழ்நிலைகளை அனுசரிச்சு, கஷ்டங்களை உணர்ந்து படி மோகனா..."

"ச... சரிக்கா...!"

ஜனனி தனக்கு நேரமாவதை உணர்ந்து பாத்ரூமிற்குள் நுழைந்து கொண்டாள்.

ஐந்து நிமிடம் ஆகியிருக்காது.

பாத்ரூம் கதவை வெளியிலிருந்து தட்டினாள் புனிதா.

ஜனனிக்கு அடுத்து ஜனித்தவள். க்வீன் மேரீஸ் காலேஜில் பிபிஏ இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருப்பவள்.

"அக்கா... அக்கா..."

"என்னடி?"

"குளிச்சிட்டியா? எனக்கு நேரமாகுது..."

"ஏன்... உனக்கு டைமிருக்கே..."

"ஸ்பெஷல் கிளாஸ்க்கா..." சலிப்பாய் சொன்னாள்.

"அதுக்கு அரைமணி நேரம் முன்னதாக எழுந்திருக்கணும். இப்ப வந்து என்னை அவசரப்படுத்தினா எப்படி? நானே இப்பதான் குளிக்கவே ஆரம்பிச்சேன்..."

"ஐயோ... அக்கா... டைமாகுதுன்னு சொல்றேனில்லே... பேசிட்டிருக்காம சீக்கிரம் வாயேன்!"

"அப்ப நீ மொதல்ல வாயை மூடு!"

"திமிர்... சம்பாதிக்கிற திமிர்..." எரிச்சலாய் முணுமுணுத்தாள் புனிதா.

"என்ன புனிதா... ஏதோ திட்டறாப்போல இருக்கு!" முகத்திற்கு சோப்பு போட்டபடி கேட்டாள் ஜனனி.



"சேச்சே... உன்னை ஏன் திட்டப்போறேன்! இந்த குடும்பத்துக்கே படியளக்கிற தெய்வமாச்சே..."

ஜனனி அவசர அவசரமாய் குளித்துவிட்டு டவலால் உடலை போர்த்திக்கொண்டு கதவைத் திறந்தாள்.

தீ மிதித்த அவசரத்தில் தரையில் கால் படாமல் டென்ஷனாய் நின்றிருந்தாள் புனிதா.

"உனக்கு செமஸ்டர் எப்போ புனிதா?"

"அடுத்த மாசம்... ஏன் கேக்கிறே?"

"சும்மாதான்! ஆமா... ஸ்பெஷல் க்ளாஸையெல்லாம் சவுன்ந்தானே வெப்பாங்க. இதென்ன புதுசா காலையிலே?"

"அ... அது... என்னைக் கேட்டா எனக்கென்னத் தெரியும்? எப்போ வரச் சொல்றாங்களோ... அப்பதானே போக முடியும்!" புனிதா இணங்கினாள்.

"ஆமாமா... எப்போ வரச் சொல்றாங்களோ, அப்பதான் போக முடியும்... போ... நேரமாகுதுப்பார்... குளி!" ஜனனி அர்த்தபுஷ்டியோடு ஒரு புன்னகையை வெளியிட்டாள்.

அந்த சிரிப்பு... புனிதாவின் தலைமுதல் கால் வரை ஒரு நடுக்கத்தை ஏற்படுத்தியது.

இடை வரை நீண்டிருந்த அடர்த்தியான கருங்கூந்தலை தளர்வாய் பின்னிவிட்டாள். அம்மா முந்தின தினம் வாங்கி ஈரத்துணியால் பத்திரப்படுத்தி வைத்திருந்த மல்லிகைப் பூவை எடுத்தபோது... அறையெங்கும் குப்பென வாசனைப் பற்றிக் கொண்டது.

"ஜனனி... தட்டு வச்சிட்டேன்... வாம்மா வந்து சாப்பிட்டுக்க" பர்வதம் அறை வாசலில் வந்து நின்றாள்.

"ஆச்சம்மா... இதோ வந்துட்டேன்!" ஜனனி அம்மா பின்னாலேயே சென்றாள்.

சூடான இட்லிக்கு வெங்காய சாம்பார் தேவாமிர்தம் : இருந்தது.

"ஜனனி... சாப்பாட்டிற்கு இந்த சாம்பார்தாம்மா வச்சிருக்கேன்." தயக்கமாய் சொன்ன அம்மாவை பார்த்து மென்மையாய் சிரித்தாள்.

"சாப்பாடே வேண்டாம். மதியத்துக்கும் டிபனே வச்சுக் கொடுத்திடுன்னு சொன்னாலும் கேக்கமாட்டேங்கிறே... ஏம்மா... உன்னை நீயே கஷ்டப்படுத்திக்கறே?"

"இந்த குடும்பத்துக்காக நீ கஷ்டப்படறதை விடவாமா நான் கஷ்டப்படறேன்? சம்பாதிக்கறது எதுக்காக? ருசிக்காக இல்லேன்னாலும் பசிக்காக... மூணு வேளை நிறைவா சாப்பிடணும்னுதானே? கஷ்டம்னு நினைச்சா, எல்லாமே கஷ்டம்தான்... சுகம்னு நினைச்சா, எல்லாமே சுகம்தான்!."

ஜனனி அம்மாவை இரக்கத்தோடு பார்த்தாள்.

ஹேண்ட் பேகினுள் லஞ்ச் பாக்ஸை எடுத்து வைக்கும்போதுதான் கவனித்தாள். சமையல் மேடையில் எப்போதும் இரண்டு டிபன் பாக்ஸ் இருக்கும். ஒன்று அவளுக்கு. மற்றொன்று புனிதாவுக்கு. இப்போது ஒன்றுதான் இருந்தது. அம்மா மறந்து விட்டாளா என்ன!

"அம்மா... புனிதாவுக்கு டிபன் பாக்ஸ் வைக்க மறந்துட்டியா?"

"இல்லே ஜனனி... அவதான் மதியத்துக்கு வேணாம்னுட்டா..."

"ஏன்?"

அவளோட படிக்கிற பொண்ணுக்கு இன்னைக்கு பிறந்த நாளாம். ட்ரீட்டோ என்னமோ சொன்னா. அது தர்றாளாம். அங்கே சாப்பிட்டுக்கறதா சொன்னா..."

எதையோ பதில் கூற வாயெடுத்த ஜனனி, புனிதா வருவதைக் கண்டு வாயை மூடிக் கொண்டாள்.

"வர்றேம்மா" என்று விடைபெற்றுக் கொண்டு தெருவில் இறங்கினாள்.

**கௌ**தம் யமஹாவை சற்று ஒதுக்குப்புறமாய் விட்டு பூட்டினான். மெல்ல நடந்து வந்து பஸ் ஸ்டாண்டில் நின்றபடி நகத்தை கடித்து துப்பிக் கொண்டிருந்த டென்ஷனான மக்களோடு கலந்தான்.

கண்களால் சுற்றிலும் துழாவினான்.

இல்லை.. இன்னும் வரவில்லை.

ஒருவேளை போய் விட்டிருப்பாளோ?

இல்லை.. இன்னும் நேரமிருக்கிறது. போயிருக்க மாட்டாள்.

தனக்குத்தானே சமாதானப்படுத்திக் கொண்டிருந்த கௌதமின் கண்கள் பலூன்போல் விரிந்தது.

தூரத்தில் அவள் வந்துக் கொண்டிருந்தாள்.

அவள் அருகில் வர வர.. புது ரத்தம் பாய்ந்தது அவனுள்.

கௌதம் இன்னும் சற்று முன்னேறி அவளுக்கு சில அடி இடைவெளி விட்டு நின்றுக் கொண்டான்.

காற்றில் சிலும்பிய அவளின் சின்னச் சின்ன முடி ஸ்பிரிங்குகள் கூட அவனை 'கவிதை பாட வாயேன்' என்று அழைத்தது.

கௌதம் விழி அகலாது இன்ச் பை இன்ச்சாய் அவளையே ரசித்துக் கொண்டிருந்தான்.

'அழகே உன் பெயர் என்ன? நீ யார்? எங்கு பணிபுரிகிறாய்?

அடுக்கடுக்காய் கேள்விகள் எழுந்தாலும் அவை அத்தனையும் நெஞ்சுக்குள்ளேயே புதைந்து அமிழ்ந்துப் போயின. அவன் தைரியம் அந்தளவுதான்.

காற்றில் புரண்ட முடிக்கற்றைகளை ஒதுக்கி விட்டபடி யதார்த்தமாய் அவனை கவனிக்கத் தவறவில்லை ஜனனி.

சுருசுருவென கோபம் ஏறி உச்சியில் அமர்ந்தது.

'பொறுக்கி. பார்வையைப் பார்! கண்ணிரண்டையும் தோண்டி எடுத்தால் என்ன? யாரிவன்? இரண்டு மாதமாய்தான் இங்கு வருகிறான். இந்த ஏரியாக்காரனா? பேசாமல் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடலாமா?

"ஹலோ"

குரல் கேட்டு எதிட்டாள்.

முகேஷ் நின்றிருந்தான்.

மென்மையாய் புன்னகைத்து பதிலுக்கு "ஹலோ" என்றாள்.

முகேஷ் அவள் தெருவில் வசிப்பவன். நாகரிகமாய் பழகுபவன். அதனால் அவனிடம் மரியாதையான நட்பு இருந்தது.

"என்ன ஜனனி. நீங்க போற பஸ் இன்னுமா வரலை? நேரமாக்சு போலிருக்கே.."



"ஆமாங்க! அப்படியே வந்தாலும்.. ஏற முடியுமான்னு தெரியலை. பார்த்தீங்களா இங்கே நிக்கற கூட்டத்தை!" சுற்றிலும் பார்வையை ஓடவிட்டாள்.

அவனைக் காணோம்!

சிரிப்பு வந்தது ஜனனிக்கு.

'ஒரு ஆண் என்னிடம் வந்து பேசுவதைப் பார்த்ததும் பயந்து ஓடிவிட்டானா? கோழை!'

"நிச்சயமா.. இன்னைக்கு நீங்க லேட்டுதான்!" முகேஷ் சொல்லிவிட்டு சிரித்தான். அவன் கண்களும் அந்தக் கூட்டத்தில் யாரையோ தேடிக் கொண்டிருந்தது.

"ப்ச்.. பஸ்ஸை கொஞ்சம் கூடுதலா விட்டா நல்லாயிருக்கும்"

"ஜனனி.. சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. பாரீஸ் வரைக்கும் நாம ஆட்டோவுல போகலாமா? அங்கேர்ந்து நீங்க வேற பஸ் பிடிச்சு போயிடுங்க.."

"சேச்சே.. வேணாங்க.." அவசரமாய் மறுத்தாள்.

"ஏங்க.. என்கூட வர சங்கடமா இருக்கா?"

"ஐயோ.. அதெல்லாமில்லே.. ஆட்டோவுல போற அளவுக்கு எனக்கு வசதியில்லே.."

"பார்த்தீங்களா? நான் என்ன ஆட்டோவுக்கு உங்களையா பணம் கொடுக்கச் சொன்னேன். நான் தர்றேன் வாங்க!"

"இருக்கட்டும்.. பரவாயில்லை முகேஷ். ஆட்டோவுல போனாலும் கூட எப்படியும் நேரத்துக்கு போய்ச் சேர முடியாது. இன்னைக்கு லேட்டுதான்... திட்டுதான்... அந்த திட்டை செலவு பண்ணி ஏன் வாங்கணும்?" ஜனனி சிரித்தபடி சொன்னாலும், முகத்தில் வேதனை படராமல் இல்லை.

"ஏன் ஜனனி? உங்க படிப்புக்கு, எக்ஸ்பீரியன்ஸுக்கு இதைவிட அதிகமான சம்பளத்திலே, நல்ல வேலையிலே சேரலாமே! அதைவிட்டு சம்பந்தமே இல்லாம ஏதோ ஒரு பத்திரிகை ஆபீஸ்ல குப்பை கொட்டிட்டு இருக்கீங்களே!"

"என்னவோ... வேலை வேலைன்னு கூடையிலே வச்சு தெருத் தெருவா வித்துக்கிட்டு வர்ற மாதிரியும், நான் வேண்டாம்னு சொன்ன மாதிரியுமில்ல பேசறீங்க? நானும் வேற வேலைக்கு ட்ரை பண்ணிட்டுதான் இருக்கேன்... எங்குமே சம்பளம் கட்டுப்படியாகலை!"

"கவலைப்படாதீங்க! நானும் எனக்கு தெரிஞ்சவங்ககிட்டயெல்லாம் சொல்லி வைக்கிறேன்.."

"உங்க ஆபீஸ்ல எந்த வேகன்ஸியும் இல்லையா?"

"ம்ஹூம்.. இப்போதைக்கு ஒரு சீட்கூட காலியாக இல்லை.. ஆனா.. ஒரு பேச்சு அடிபட்டது. அது எந்தளவு நிஜம்னு தெரியாது. கூடுதலா ஒரு கம்ப்யூட்டர் வாங்கப் போறதாவும், அதுக்கு ஒரு லேடியை போடப் போறதாவும் பேசிக்கிட்டாங்க."

"வாண்டட் இருந்தா சொல்லுங்க ப்ளீஸ்"

"கண்டிப்பா! ஆமா நீங்க டிடிபில தானே வொர்க் பண்றீங்க? இந்த கம்ப்யூட்டர் விஷயமெல்லாம் தெரியுமா?"

"தெரியுமாவா? எல்லாத்தையும் கரைச்சு குடிச்சாச்சு. இந்த டிடிபியே பத்திரிகை ஆபீஸ்ல கத்துக்கிட்டதுதான். ஆரம்பத்துல அங்கே

டைப்பிஸ்ட்தான் போனேன்!"

"பரவாயில்லையே! உங்க பப்ளிகேஷன்லேர்ந்து என்னென்ன புத்தகங்கள் வெளியிடறாங்க?"

"நாவல், காமிக்ஸ், ஆன்மீகம், பெண்களுக்காக அப்படி இப்படின்னு ஏழெட்டு பத்திரிகைகள் வருது" சலிப்பாய் சொன்னாள்.

சற்று நேரத்தில் அவள் போகும் பஸ் வந்தது. முண்டியடித்து ஏறிய ஜனனிக்கு தலையாட்டி விடை கொடுத்த முகேஷ் யோசனையில் ஆழ்ந்தான்.

## 2

பஸ்ஸை விட்டிறங்கியதும் சேலை தடுக்க, வேகவேகமாய் ஆபீஸை நோக்கி நடைபோட்ட ஜனனிக்கு இருபத்தி மூன்று வயது! பி.காம். ப்ளஸ் கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்தவள்.

பர்வதம்.. ஜனனியை படிக்க வைக்கவே படாதபாடு பட்டாள். பர்வதம் விதவையானபோது ஜனனிக்கு பதினாலு வயது. இருந்த வீட்டைத் தவிர வேறு சொத்து பத்தில்லை. வீடு சிறியது என்பதால் அதை பாதி வாடகைக்கு விட்டு வருமானம் தேடிக் கொள்ளவும் முடியவில்லை.

பெரிய பெண்ணை படிக்க வைத்து ஆளாக்கினால், கஷ்டம் தீருமே என்று பர்வதம் தனக்கு தெரிந்த அத்தனை வேலைகளையும் செய்து படிக்க வைத்தாள்.

அவள் நம்பிக்கையை வீணாக்கவில்லை ஜனனி. நன்கு படித்தாள். படித்து முடித்த கையோடு எந்த வேலையும் உடனே கிடைத்து விடவில்லை. இந்த பத்திரிகை ஆபீஸில் வேலை கிடைத்தும்கூட அவளின் சிநேகிதி ஒருத்தியின் வக்கீல் தந்தையின் சிபாரிசு மூலமாகத்தான்.

அவள் படித்த படிப்புக்கு ஏற்ற வேலையல்ல அது. ஆரம்பத்தில் டைப்பிஸ்டாக அமர்த்தப்பட்டாள். மேட்டர்களை கம்போஸ் பண்ணும் டி.டி.பி வேலையை அங்கிருந்தே கற்றாள். அதையே கையாளத் தொடங்கினாள்.

தினசரி இரண்டு பஸ் மாறி அலுவலகம் வருவதற்குள் குறைந்தது பதினைந்து நிமிடமாவது தாமதமாகி விடுவதால்... ஜி.எம். என்ற போர்டை டேபிள் மீது வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் கோகிலா ஜனனியை உஷ்ணமாய் பார்ப்பது வழக்கமாயிற்று. கோகிலா எம்.டி.யின் மனைவி என்பதால் அவளைப் பார்த்து நாற்காலிகூட பயப்படும். அதற்கேற்றாற்போல பயமேற்படுத்தும் தோற்றமும்கூட!

பத்து நிமிடம் லேட்டாக வருவதனால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது என்பது கோகிலாவுக்கும் தெரியும். அவள் கோபத்திற்கு காரணம் இதுவல்ல. ஜனனியின் அழகு!

ஜனனி அவள் கோபத்தை பொருட்படுத்துவதில்லை.

"ஸாரி மேடம்!" என்ற ஒரு வார்த்தையோடு தலைகவிழ்ந்து அவள் பொரிந்து கொட்டிய சொற்களை செவிமடுத்துக் கொள்வாள்.

வேறுவழி? வீட்டில் உள்ள ஜீவன்கள் சாப்பிட வேண்டுமே! தங்கைகள் படிக்க வேண்டுமே! தலைவலி, காய்ச்சல் என்று வந்தால் டாக்டரிடம் ஓட வேண்டுமே! தன்மானம் பார்த்து வேலைக்கு உலை வைத்தால் வீட்டில் உலை வைக்க முடியாது.



ஆனால், சமீபகாலமாக அந்த அலுவலகத்திற்கு வரவே பிடிக்கவில்லை.

காரணம் கோகிலா அல்ல!

புதிதாய் பிறப்பெடுத்த சினிமா பத்திரிகை. பெயருக்குத்தான் சினிமா பத்திரிகை என்ற போர்வை! ஆனால் அதில் இடம்பெறும் படங்களும், செய்திகளும் கண் கூசச் செய்பவை. அந்த மேட்டர்களை... கை நடுங்க, மனம் வலிக்க அடிக்கும்போது ஜனனிக்கு... கண்கள் தளும்பும்.

'இப்படியெல்லாம் துன்பப்பட வைக்கிறாயே கடவுளே!' என்று குமைவாள்.

விஷயம் அதோடு நின்றால் பரவாயில்லை.

லே-அவுட் ஆர்ட்டிஸ்ட் ரத்தினவேலுக்கு ஜனனி மீது சொல்ல முடியாத அளவுக்கு ஒரு இது இருந்தது. கொஞ்சம் வக்கிரபுத்தி வேறு. சின்னச் சின்ன தவறுகளைக்கூட தவறு என்று சொல்ல முடியாது. நிமிஷத்துக்கு விதம் விதமாய் மாறும் ஆர்ட்டிஸ்ட் புத்தி என்றுதான் சொல்ல வேண்டும். 'மேடம்... மஞ்சம் என்ற வார்த்தையை இத்தனை பாய்ண்டில் பத்துமுறை அடித்துக் கொடுங்கள். அதை டைட்டிலாக வைக்க வேண்டும்' என்று முன்னர் இருந்த டைட்டிலை குப்பையில் போடுவான். ரத்தினத்தின் கண்கள் ஜனனியின் செழுமையான உடலை அளவெடுக்கும். வாய்தான் பேசுமே தவிர, கண்கள் முகம் பார்க்காது.

அந்த வேலையை விட்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் விலக வேண்டும் என்று முடிவெடுத்தாள். தனக்கு தெரிந்தவர்கள் அத்தனை பேரிடமும் சொல்லி வைத்தாள்.

நல்ல வேலைதான் கிடைத்த பாடில்லை.

எதையோ எழுதிக்கொண்டிருந்த கோகிலா, ஜனனி உள்ளே நுழைவதைப் பார்த்ததும் பேனாவை மூடி வைத்தாள்.

ஜனனி பழகிய நாய்க்குட்டிபோல் அவள் முன் வந்து நின்றாள்.

"ஸாரி... மேடம் லேட்டாயிடுச்சி!"

"அதை நீ சொல்லித்தான் தெரியணுமா? வாட்ச் சொல்லுதே! இதென்ன... தினசரி இதே பொழப்பா போயிடுச்சே?"

"பஸ் பிரேக் டவுன் ஆயிடுச்சி மேடம். அதான் இன்னைக்கு லேட்..!"

"அதெப்படி, நீ வர்ற பஸ்ல மட்டும் பிக்பாக்கெட் அடிக்கிறானுங்க, சண்டை போடறானுங்க, ஆக்ஸிடெண்ட் ஆகிடுது, பிரேக் டவுன் ஆகிடுது...? ரொம்ப ஆச்சரியமா இல்லே?" நக்கலாய் கேட்டாள்.

"....."

"நல்லா நிதானமா டிரஸ் பண்ண மட்டும் நேரமிருக்கோ? போ... போ... இனிமே லேட்டா வந்தா, சம்பளத்துல கட் பண்ணச் சொல்றேன், அப்பதான் ஆபீஸ் உருப்படும் போ... போய் வேலையைப் பார்' இன்னு டேட் நெருங்குதேன்னு கொஞ்சமாவது நெஞ்சுல பயம் வேணாம்? அடிக்க வேண்டிய மேட்டர் மலைபோல குவிஞ்சு கிடக்கு..." கோகிலா பேச்சை நிறுத்துவதாக தெரியவில்லை.

ஆபீஸ் மொத்தமும் அவளை எட்டிப் பார்த்தது... ஜனனிக்கு அவமானமாக இருந்தது.

குடும்ப பாரம் மட்டும் இல்லையென்றால், 'சீ... போடி... நீயுமாச்சு உன் வேலையுமாச்சு,' என்று தூக்கி எறிந்து விட்டு போய் விடலாம். கே...

என்று தொத்தபடி தன்னறைக்குள் நுழைந்தாள். ஏ.சி. குப்பென்று அவளை தழுவிக் கொண்டது.

அடர்த்தியான கூந்தல் தாலாட்ட... நன்கு மூடியிருந்தும் சற்று இடை வெளியில் பளிச்சிட்ட இடையின் சந்தன நிற அழகு.. கோகிலாவிற்கு வெறுப்பேற்றியது.

'பணமில்லாத நாய்களுக்கு இவ்வளவு அழகு தேவைதானா?' பொருமிக் கொண்டாள்.

இன்று சற்று அதிகப்படியாய் திட்டி விட்டாள் கோகிலா. ஜனனிக்கு மனதிற்கு மிகவும் வேதனையாக இருந்தது.

"என்ன.. இன்னைக்கும் செம டோஸா?" பக்கத்து சீட் அம்பிகா மெல்லமாய் கேட்டாள். ஒரு பெருமூச்சோடு விரக்தியான சிரிப்பையும் வெளியிட்டு தன் வேலையில் இறங்கினாள்.

"ஹலோ.. ஜனனி குட்மார்னிங்!" ரத்தினம் சொல்லியபடி உள்ளே நுழைந்தான்.

"குட்மார்னிங் ஸார்!" பதிலுக்கு சொல்லிவிட்டு குனிந்து கொண்டாள்.

"இந்த மேட்டர் உடனே வேணும். வெரி அர்ஜெண்ட்" என்று கத்தையாய் பேப்பர்களை நீட்டினான்.

'ஒரு லே-அவுட் ஆர்ட்டிஸ்டுக்கு கம்ப்யூட்டர் ரூமில் என்ன வேலை? இந்த மேட்டரை சப் எடிட்டரிடமோ, அட்டெண்டரிடமோ கொடுத்தனுப்புவதற்கென்ன? அவர்களிடமிருந்து பறித்துக்கொண்டு இந்த சாக்கில் வந்து பல்லிளிக்க வேண்டுமோ!' ஜனனிக்கு வெறுப்பாய் வந்தது.

"சரி.. சார்.. பையனை அனுப்புங்க.. அஞ்சு நிமிஷத்துல கொடுத்து விடறேன்"

"அப்புறம்.. ஜனனி"

"என்ன ஸார்?"

"இந்த சேலை ரொம்ப நல்லாருக்கு" என்றவன் இடைவெளிவிட்டு 'உங்களுக்கு' என்று கூறி ஒரு அசட்டு சிரிப்பையும் உதிர்த்துவிட்டுப் போய் விட்டான்.

'கடவுளே.. இன்னிக்கு முழிச்ச முகமே சரியில்லே போலிருக்கே' என்று தலையில் கைவைத்துக் கொண்டாள் ஜனனி.

அலுவலகம் வந்து சேர்ந்தும் கௌதமிற்கு படபடப்பு அடங்கவில்லை. குட்மார்னிங் சொன்னவர்களுக்கு ஒரு சின்ன தலையசைப்பின் மூலம் மரியாதை செலுத்தியபடி மேனேஜர் என்று போர்டு மாட்டியிருந்த அறைக் கதவை திறந்து உள்ளே போனான்.

டேபிள் மீது கண்ணாடி தம்ளர் நிறைய மினரல் வாட்டர் நிரப்பப்பட்டு மூடியிருந்தது. மடக் மடக்கென்று முழுதும் சரித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டான். கர்ச்சிப் எடுத்து முகம், கழுத்து என துடைத்துக் கொண்டவன் ஏசி, சுவிட்சை போட்டான்.

'ஹொய்' என்ற சத்தத்துடன் அறை குளிரத் தொடங்கியது.

டென்ஷன் குறைந்து போயிருந்தது.

பர்ஸ் கேஸை எடுத்து டேபிள் மீது வைத்தவன் உள்ளே பத்திரமாய் வைக்கப்பட்டிருந்த அந்த போட்டோவை எடுத்து அதிலேயே சார்த்தி



நிறுத்தினான். ஒரு கணம் கண் மூடி மனதுக்குள் பிரார்த்தித்தான்.

போட்டோவிலிருந்த திலகவதி உதடு பிரியாமல் சிரித்துக் கொண்டிருந்தாள்.

கருகருவென கேசம். காதோரமெல்லாம் சுருள்சுருளாய் சுருண்டிருந்த முடி அவளின் வட்ட முகத்திற்கு மேலும் அழகாக இருந்தது. பெரிய கண்கள். வளைவான புருவம். வடிவான உதடு. உதட்டிற்கு கீழ் மினுங்கும் சின்ன மச்சம். செல்லம் கொஞ்சத் தூண்டும் பாவனை.

திலகவதி - கௌதமின் தாய்.

இதுவரை நேரில் தாயைப் பார்த்ததில்லை. இனி பார்க்கப் போவதுமில்லை.

காரணம் - அவன் இந்த பூமியில் ஜனித்த அந்நாளே நிரந்தரமாய் அவள் கண் மூடிவிட்டாள். திலகவதியின் பெற்றோர் அவளுக்கு முன்பே இறந்து போனதால் கௌதம் அனாதையானான்.

தூரத்து உறவான பஞ்சாட்சரம் திலகவதிக்கு அண்ணன் முறை வேண்டும்.

திருமணம் செய்யாமல்.. குழந்தையை சுமந்த திலகவதி கடைசிவரை அந்த குழந்தைக்கு தகப்பன் பெயரை சொல்லவே இல்லை. ஆனால் அந்த ரகசியம் ஒரே ஒரு நபருக்குத்தான் தெரியும்.

அவள் - சுபத்ரா!

திலகவதியுடன் படித்த மிக நெருங்கிய தோழி! திலகவதி இறந்த மறு மாதமே சுபத்ராவிற்கு திருமணம் முடிந்து கணவனுடன் கல்கத்தாவிற்கு போய் செட்டிலாகிவிட்டாள். தோழி தன்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டதால்.. அவளும் தனக்கு தெரிந்த அந்த உண்மையை ஒரு ஈ காக்காயிடம்கூட சொல்லவில்லை.

கௌதமிற்கு இன்று வரை அப்பா பெயர் என்னவென்றுகூட தெரியாது. தன் பெயருக்கு முன்னால் இனிஷியலாக அம்மாவின் பெயரைத்தான் சேர்த்திருந்தான்.

பஞ்சாட்சரம் மனது கேட்காமல் அந்த பிஞ்சுக் குழந்தையை அனாதையாக விட்டுவிட மனமின்றி தானே வளர்த்தார்.

படிக்க வைத்தார். அவருக்கும் ஏற்கனவே இரண்டு பிள்ளைகள் இருந்தது. அவர்களைப் போலவே இவனையும் பாகுபாடின்றி படிக்க வைத்தார். பிள்ளைகள் இருவரும் கௌதமை விட ஏழெட்டு வயது மூத்தவர்கள்.

மூத்த பிள்ளை அன்பரசு மும்பையில் வேலை கிடைத்து அங்கேயே ஒரு மும்பைப் பெண்ணை மணந்து செட்டிலாகி விட்டான். மும்பைப் பெண்ணை மணந்த கோபத்தில் பஞ்சாட்சரம் தன் மூத்த மகனை அத்தோடு தலை முழுகினார். அம்மா இருந்திருந்தால் எடுத்துச் சொல்லி கோபத்தை தணித்திருப்பாள். ஆனால் அவளும் பத்து வருடத்திற்கு முன்பே சுமங்கலியாய் போய் சேர்ந்து விட்டாள்.

அடுத்த மகன் திருநாவுக்கரசு நல்ல அறிவாளி. அவன் படித்த கம்ப்யூட்டர் டிசைனர் படிப்புக்கு வெளிநாட்டிலிருந்து வலிய அழைப்பு வந்தது. பெரிய கம்பெனி. இந்திய மதிப்பிற்கு லட்ச ரூபாய் சம்பளம். வீடு, கார், இன்ன பிற வசதிகள். பூரித்துப் போனார் பஞ்சாட்சரம். மகனை பெருமை பொங்க லண்டனுக்கு அனுப்பி வைத்தார். அவன் போய் சேர்ந்த மூன்றாவது மாதம் எல்லா ஏற்பாடும் செய்து தந்தையை தன்னுடன் வந்திருக்குமாறு அழைத்தான். விசா எல்லாம் தயார்.

போய்தான் ஆக வேண்டும். இனி எந்த ஜென்மத்தில் லண்டனை யெல்லாம் பார்க்கப் போகிறோம்? ஆனால் கௌதம்? அவனை எப்படி தனியே விட்டுச் செல்வது!

அப்போதுதான் எஸ்.எஸ்.எல்.சி. முடித்து விடுமுறையில் இருந்தான் கௌதம்! அவனைப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது.

ஆனால் பஞ்சாட்சரத்திற்கு வேறு வழி தெரியவில்லை. திருச்சியிலிருந்து சென்னைக்கு வந்து நல்ல ஹாஸ்டல் வசதிகளோடு கூடிய பள்ளியை விசாரித்து அதில் கௌதமை சேர்த்து விட்டார். மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை அனுப்புவதாகக் கூறி கண்ணீருடன் விடை பெற்றார்.

கௌதம் மாமா எதிரே தன் உணர்ச்சியைக் காட்டிக் கொள்ள வில்லை. ஆனால், அவர் போனபிறகு அழுது கொண்டேயிருந்தான். இரண்டு நாட்களாக எதையும் சாப்பிட மறுத்தான். உடன் தங்கியிருந்த ஹாஸ்டல் நண்பர்கள் அவனை ஒருவாறாக தேற்றி இயல்புக்கு கொண்டு வந்தனர்.

சொன்னபடி மாமா, மாதாமாதம் தவறாமல் பணம் அனுப்பினார். நன்றாகப்படி, ஒழுக்கம் தவறாதே என்று கடிதம் எழுதுவார். ஒருநாள் திருநாவுக்கரசுக்கு லண்டனில் உள்ள இந்தியப் பெண் ஒருத்தியைப் பார்த்து மணமுடித்ததாக எழுதினார். அதன் பின் வந்த கடிதங்களில் சுரத்து குறைந்திருந்தது.

'இங்கு சரியில்லை கௌதம். எதுவும் சரியில்லை. திருநாவுக்கரசு முன்பு போல் இல்லை. மருமகளும் மதிப்பதில்லை.' என்ற வேதனை சொற்களைத் தாங்கி கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. ஒருநாள் பஞ்சாட்சரம் இறந்து விட்டதாக ஹாஸ்டலுக்கு போன் பண்ணி சொன்ன திருநாவுக்கரசு, 'இனி உன் வழியை நீ பார்த்துக்கொள். பணத்தை எதிர்பார்க்காதே!' என்றும் மூஞ்சிலடித்தாற்போல் கூறி வைத்து விட்டான். அப்போது கௌதம் பி.காம். பைனல் இயர் படித்துக் கொண்டிருந்தான். மாமாவின் இழப்பிற்காக மறுகிய மனம் தைரியத்தை மட்டும் இழக்கவில்லை. மாமா அனுப்பிய பணத்தில் மிச்சம் பிடித்து சேர்த்து வைத்திருந்த பணமே தேவைக்கு அதிகமாக இருந்தது.

கௌதம் நன்றாகப் படித்தான். பி.காம். முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று தபால் மூலம் எம்.காம் படித்தான். வருமானத்திற்காக ஒரு கம்பெனியில் கிளார்க்காக பணிபுரிந்தான்.

எம்.காம். முடித்தபின் அவன் சான்றிதழ்களுடன் ஏறிய கம்பெனி 'திலகா இண்டர்நேஷனல்'தான்.

அவன் அதிர்ஷ்டம்... உடனே வேலை கிடைத்தது. நல்ல சம்பளம். மகிழ்ந்துபோனான் கௌதம். அதுவும் இரட்டிப்பு மகிழ்ச்சி. பெரிய கம்பெனியில் அதுவும் உலகமெங்கும் கிளை பரப்பியுள்ள நிறுவனத்தில் எடுத்ததும் அஸிஸ்டண்ட் மேனேஜர் வேலை என்றால் சும்மாவா? தவிர, தன் தாயின் பெயரே கம்பெனியின் பெயராகவும் இருந்ததில் சந்தோஷம் பிடிபடவில்லை.

அவனின் சின்ஸியர் வொர்க்... வெகு விரைவில் ப்ரமோஷனை தேடித் தந்தது. மேனேஜர் பதவி கிடைத்தது.

கௌதம் மூடிய கண்களை திறந்து போட்டோவை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான். இது தினசரி வழக்கம்.

அன்னையை வழிபடாமல் எந்த காரியத்தையும் துவங்க மாட்டான்.



திலகவதியின் சாயல் அப்படியே கௌதமிடம் இருந்தது.

ப்ரீப் கேஸை மூடியவன்.. கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு நிமிர்ந்து "எஸ்" என்றான்.

உள்ளே முகேஷ் சிரித்தபடி நுழைந்தான்.

கௌதமின் உள்ளங்கை உடனடியாய் வியர்த்தது.

3

முகேஷ் கௌதம் பணிபுரியும் அதே கம்பெனியில்தான் சேல்ஸ் எக்ஸிக்யூடிவாக பணி புரிந்தான். சம வயது என்பதால் இருவரும் நண்பர்களாக நெருங்கிப் பழகினார்கள்.

முகேஷ் உள்ளே நுழைந்ததும் கௌதமையே பார்த்தவாறு அவன் எதிரே அமர்ந்தான்.

"ஹி... ஹி... வா முகேஷ்... குட்மார்னிங்" என்றான் கௌதம்.

"குட்மார்னிங்"

"......"

முகேஷின் முகத்தை நேருக்கு நேர் சந்திக்க முடியாத அவஸ்தை யோடு பேப்பர் வெயிட்டை சுழற்றத் தொடங்கினான்.

முகேஷ் இரண்டு கைகளையும் டேபிள் மீது ஊன்றி முகத்தை தாங்கி அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஹி... ஹி... முகேஷ், இன்னைக்கு ஜி.எம். வரலையா?"

"அவர் ஒரு வாரம் லீவுன்னு நேத்து நீதானே சொன்னே?"

"ஆ... ஆமாம்!"

"......"

"வண்டியிலே வரலே போலிருக்கே? என்ன சர்வீஸ்க்கு விட்டிருக்கியா?"

"நேத்து நைட்டுதான் மெக்கானிக் ஷாப்ல விட்டேன். அது உனக்கெப்படி தெரியும்?"

"அது... அது..."

"போதும்.... ரொம்ப திணறாதே! எங்க ஏரியாவுல உனக்கென்ன வேலை?" நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

"எனக்கென்ன வேலை?"

"அதையேதான் நானும் கேக்கறேன்"

"புரியலை"

"பைக்குல வர்றவனுக்கு பஸ் ஸ்டாண்ட்ல என்ன வேலைன்னுதான் கேக்கறேன்."

"நான் ஏன் பஸ் ஸ்டாண்டுக்கு..."

"டேய்... டேய்... சும்மா நிறுத்துடா... ரொம்ப நடிக்காதே! பஸ் ஸ்டாண்ட் ஓரம் உன் பைக்கையும் பார்த்தேன். பொண்ணு பின்னாடி உன்னையும் பார்த்தேன்... என்ன லவ்வா?"

"ச்சீ..."

"என்ன சீச்...? என்னை பார்த்ததும் பஞ்சா பறந்துட்டியே... ஏன்?"

"......"

"என்ன வெக்கமா? அம்மா சொல்லு யாரை லவ் பண்றே? அவ பேரென்ன? காலேஜ் போறவளா? வேலைக்குப் போறவளா?"

இதற்குமேல் தப்பிக்க முடியாது என்று புரிந்தது. வேறு வழியின்றி முகேஷிடம் சரணடைந்தான் கௌதம்.

"நான் அவளை லவ் பண்றேன் முகேஷ்!"

"யாரை?"

"அவ பேரு என்ன? என்ன பண்றா? எதுவுமே தெரியாது."

"கண்றாவி. ஆள் எப்படியிருப்பா?"

"உனக்குத் தெரியும் முகேஷ்!"

"எனக்கு? ஏய்... நீ யாரைச் சொல்றே?" முகேஷ் அதிர்வாய் பார்த்தான்.

"நீ அவகிட்டே ஹலோன்னு சொன்னியே..."

"ஜனனியா?" உள்ளே வலித்தது முகேஷிற்கு.

"அவபேரு ஜனனியா? ரொம்ப அழகான பேர்"

"......"

"என்ன முகேஷ் அமைதியாய்ட்டே? அவ உனக்கு உறவுக்காரியா?"

'சொந்தக்காரியா ஆக்கிக்கணும்னு நெனைச்சிருந்தேன்' சொல்லவில்லை. கௌதமை ஒரு பெருமூச்சோடு ஏறிட்டான்.

"ஜனனி... எங்க தெருவிலே குடியிருக்கிற பொண்ணு. ரொம்ப நல்ல பெண். அதேசமயம்... அவளுக்கு இந்த காதல் கத்தரிக்காயெல்லாம் பிடிக்காது. அவளுக்கென்று குடும்ப பொறுப்பு இருக்கு. அவளை நம்பி அம்மாவும், படிக்கிற ரெண்டு தங்கைகளும் இருக்காங்க. அனாவசியமா நீ அவ பின்னாடி சுத்த வேண்டாம் கௌதம். எனக்கு தெரிஞ்சவரைக்கும் சொல்லிவிட்டேன். அப்புறம் உன் இஷ்டம்.'

முகேஷின் குரல் கரகரப்பாய் வெளிப்பட்டது. கௌதம் பரிதாபமாய் அவனைப் பார்த்தான்.

"நீ ரொம்ப ஈஸியா சொல்லிட்டே முகேஷ்... ஆனா, அவளை என்னால மறக்க முடியாது."

"என்னடா மறக்க முடியாது? என்னமோ அவளும் உன்னை காதலிக்கிற மாதிரி? அவ உன்னை வேண்டாம்னு சொல்லிட்டா என்ன பண்ணுவே?" படபடத்தான் முகேஷ்.

"எனக்கு நம்பிக்கை இருக்கு. அவளும் நிச்சயமா என்னை காதலிப்பா..."

"எப்படி அவ்வளவு உறுதியா சொல்றே?"

"அவள் யாரு, எந்த ஊரு, என்ன பேர்? எதுவுமே தெரியாது. என் வீட்டிலேர்ந்து ஆபீஸுக்கு வர்றப்ப ஆன் த வே உங்க ஏரியா வழியா வரும்போது முதமுதலா ரொம்ப எதேச்சையாதான் அவளை பஸ் ஸ்டாண்ட்ல பார்த்தேன்! அப்பவே... ஏதோ ஒரு உணர்வு ஜென்ம ஜென்மமா எங்களுக்குள்ளே ஏதோ ஒரு பிணைப்பு இருக்கிற மாதிரி...



என் பைக்கூட அவளைப் பார்த்து நின்னுடப்போச்சு முகேஷ்! அதுக்கப்புறம் ரெண்டு மாசமா அவளுக்காகவே பஸ் ஸ்டாண்ட்ல காத்துக்கிட்டு நிற்க ஆரம்பிச்சேன். ஒருநாள்கூட அவளைப் பார்க்காம என்னால இருக்க முடியலடா!

நான் அம்மா முகத்தை இதுவரைக்கும் பார்த்ததில்லே. அவங்களோட அன்பு எனக்கு கிடைச்சதில்லே. அந்த அன்பு எனக்கு வேணும் முகேஷ். அது ஜனனி மூலமா எனக்கு கிடைக்கணும். ஒருவேளை... ஒருவேளை அவள் நீ சொன்னமாதிரி என்னைப் பிடிக்கலேன்னு சொல்லிட்டா... நான் அவளோட வாழ்க்கையிலே நிச்சயம் குறுக்கிட மாட்டேன். ஆனா, மனசுக்குள்ளேயாவது கடைசி வரைக்கும் நான் அவளோடதான் குடும்பம் நடத்துவேன். இதை தடுக்க... அந்த ஆண்டவனே முயன்றாலும் முடியாது முகேஷ். அந்தளவுக்கு நான் அவளை காதலிக்கிறேன்."

கண்கள் பளபளக்க கௌதம் சொல்லிக்கொண்டே போக. உட்கார்ந்திருந்த சீட் முள்ளாய் குத்தியதுபோல் அவஸ்தையாய் நெளிந்தான் முகேஷ்.

ஜனனி முகத்தை கழுவிக்கொண்டு, ரோஸ் நிறத்தில் சின்னச் சின்ன சிவப்பு பூக்கள் சிதறியிருந்த நைட்டியை மாட்டிக்கொண்டு நடுக்கூடத்தில் அமர்ந்தாள். கழுவியிருந்த முகத்தில் பளிச்சென்று சிறியதாய் ஸ்டிக்கர் பொட்டு! அதற்கு மேல் சின்னதாய் விபூதிக்கீற்று.

பார்வதம் அவள் முன் சமைத்து வைத்த பொருட்களை எடுத்து வந்து வைத்தாள்.

"மோகனாவையும், புனிதாவையும் கூப்பிடும்மா! அவங்களுக்கு வேற தனியா பரிமாறணுமா?"

"நான் வந்தாச்சு! புனிதாவுக்கு சாப்பாடு வேண்டாமாம்!" மோகனா அவள் எதிரே வந்தமர்ந்தாள்.

"ஏன்... அவளுக்கு ஏன் வேண்டாமாம்?"

"தலையை வலிக்குதாம்! அவளோட ஃப்ரெண்டுக்கு பிறந்த நாள்னு சொன்னேனே... அங்கே நிறைய சாப்பிட்டுட்டு வந்துட்டாளாம்."

"அப்படியா?" என்றவள் பேச்சை மாற்றினாள்.

"என்னம்மா... பண்ணியிருக்கே?"

"வத்தக்குழம்பு, ரசம், கேரட் பொரியல், அப்பளம்..." அம்மா இருவருக்கும் தட்டை வைத்தபடி சொன்னாள்.

"மோகனா... எக்ஸாம் நல்லா எழுதினியா?"

"எழுதினேன்க்கா"

"பாட்டையா? பாடத்தையா?"

"நிஜமாவே நல்லா எழுதியிருக்கேன்க்கா!"

"ப்ராக்ரஸ் ரிப்போர்ட் வந்தா தன்னால தெரிஞ்சு போயிடும். சாப்பிடு. சாப்பிட்டு முடிஞ்சதும் தூங்கிடாதே! பதினோரு மணி வரைக்கும் உட்கார்ந்து படிக்கணும். நாளைக்கு எக்ஸாம் இருக்குதில்லே."

"இருக்குக்கா..."

"அம்மா... நீயும் தட்டை போட்டு சாப்பிடேம்மா!"

"இருக்கட்டும் ஜனனி! நீங்க ரெண்டு பேரும் முதல்ல சாப்பிடுங்க..." பார்வதம் இன்னும் கொஞ்சம் சாதத்தை ஜனனி தட்டில் போட வந்தாள்.

"வேணாம்மா... போதும்!"

"என்னம்மா... அதுக்குள்ளே..."

"போதும்மா..."

"குழம்பு புடிக்கலையா?"

"ரொம்ப நல்லாருக்கு... நாளைக்கும் எனக்கு இதையே கொடும்மா..."

"அப்புறம் ஏம்மா... சரியாவே சாப்பிடலை?"

"ஒண்ணுமில்லேம்மா..."

"என்ன ஜனனி... நீ ஒண்ணுமில்லேன்னு சொல்லும்போதே ஏதோ ஒண்ணு இருக்குன்னு புரியுது. என்னம்மா?"

"ப்ச்... அந்த ஆபீஸை விட்டு சீக்கிரம் மாறணும். வேற வேலை தேடிட்டிருக்கேன்."

"ஏம்மா... எதுனா பிரச்னையா?"

"எங்கே பிரச்னை இல்லே சொல்லு! பொண்ணாப் பொறந்தா சாகுற வரைக்கும் பிரச்னைதான். நீ பாட்டுக்கு என்னவோ ஏதோன்னு நினைச்சு பயந்துடாதே! தினசரி பஸ் லேட்டாகுது. அதனால டைமுக்கு ஆபீஸ்க்கு போய் சேர முடியலே. இனிமே லேட்டா வந்தா... சம்பளத்துல கத்தரி வைப்பாங்களாம். இப்ப வாங்கற சம்பளமே உன்னைப்பிடி, என்னைப்பிடின்னு இழுத்து பிடிச்சிட்டிருக்கப்ப... சம்பளம் குறைஞ்சா... யாரைப்போய் பிடிக்கிறது?"

பார்வதம் மகளை ஆதுரமாய் தலையை தடவினாள்.

"ஆண்டவன் எப்பவும் சோதனையே தந்துட்டிருக்கமாட்டான் ஜனனி. உனக்கு நல்ல எதிர்காலமிருக்கு. நீ பொறந்தப்பவே ஜாதகத்துல உனக்கு ராஜயோகம்னு வந்தது. நீ... நல்லாருப்பே ஜனனி... எதை நினைச்சும் கவலைப்படாதே! ரொம்ப கஷ்டப்பட்டு உடம்பை பாழாக்கிக்காதே! நானும் பழையபடி வேலைக்கு போறேன் ஜனனி!"

"ஏம்மா... எம்மேல உனக்கு நம்பிக்கையில்லையா?"

"நான் அதுக்காக சொல்லலேம்மா! உனக்கும் இருபத்தி மூணு வயசாயிடுச்சு. உன் வயசுல எனக்கு மூணு குழந்தைங்களும் பொறந்தாச்சு. உனக்கும் கல்யாணம் காய்ச்சின்னு பண்ண வேணாமா?"

"பண்ணிட்டு? என்னம்மா பேசறே? இதப்பார்... நான் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சொல்லலே! நானும் பண்ணிப்பேன். ஆனா, இப்ப இல்லே. புனிதா படிப்பு முடியட்டும் அவளுக்கு வேலை கிடைக்கட்டும். அதுக்கு மேலே மோகனா படிப்பு முடியணும். அதுக்கு இன்னும் வருஷங்கள் இருக்கு. அவள் தலையெடுக்கணும். கடைசி வரைக்கும் இந்த குடும்பத்துக்கு நான் உழைக்கிற பணத்தை கொடுக்கணும். அதுக்கு ஒத்துக்கற ஆம்பளைதான் எனக்கு புருஷன்" ஜனனி தீவிரமாய் பேசினாள்.

"என்ன ஜனனி... நீ போடற சட்டத்துக்கு எந்த ஆம்பளை ஒத்துக்குவான்?"

"ஏம்மா... அப்ப மனசாட்சி உள்ள ஆம்பளை இங்கே யாருமே



இல்லேங்கறியா? ஒரு ஆண் மட்டும் தன் குடும்பத்தை கடைசிவரைக்கும் காப்பத்தணும். ஒரு பெண் காப்பாத்தக் கூடாதா? என்னம்மா நியாயம் இது? தட்டில் கையை கழுவினாள்.

பார்வதம் வாயடைத்துப் போனாள்.

ஜனனி கொல்லைப்புறம் சென்றாள்.

தெளிந்த வானத்தில் அரைநிலா சோகையாய் முகம் காட்டியது.

இருள் போர்த்தியிருந்த செடியிலிருந்து நித்திய மல்லிகை வாசம் ஓடோடி வந்து மூக்கை நிறைத்தது. சின்னச்சின்ன நட்சத்திரங்களாய் மலர்ந்திருந்த பூக்கள் பளிச்சென்று தெரிந்தது.

ஒரு கிணறும்... அதையொட்டி கொய்யா மரமும், முருங்கை மரமும் இருந்தது.

அருகிலேயே துணி துவைக்கும் கல்மேடை!

அந்த மேடைமீது... யாரோ... யாரோ இல்லை... புனிதாதான் அமர்ந்திருந்தாள்.

ஜனனி அவளருகே சென்றாள்.

"புனிதா..."

"...."

"புனிதா...."

"ஆ... என்ன?" திடுக்கிட்டு திரும்பினாள்.

"தலைவலின்னு சொல்லிட்டு இங்கே என்ன பண்ணிட்டிருக்கே?"

"ஓ... ஒண்ணுமில்லே... உள்ளே புழுக்கமா இருந்தது. அதான்... இங்கே..."

"இங்கே அதைவிட புழுக்கமாயிருக்கே! ஆமா, ஏன் சாப்பிடலை?"

"தலைவலிக்கா;.."

"அதுக்கு ஒரு மாத்திரை சாப்பிட்டா போதாதா? அதுக்கேன் வயத்தை காயப்போடறே? ரசம் சாதமாவது சாப்பிடேன்."

"இல்லேக்கா... ஒரு பர்த்டே பார்ட்டியில சாப்பிட்டு வந்திட்டேன்..."

"யாருக்கு பர்த்டே?"

"அது... ப்ரீதா இல்லே... அவளுக்குத்தான்!"

"ஒரு நாள் ஸண்டே நம்ம வீட்டுக்கு வந்தாளே... அவளுக்கா?"

"ஆமாங்க்கா...!"

"சரி... நேரமாகலே... போய்ப்படு!"

புனிதா உடனே அங்கிருந்து அகன்றாள். போகும் அவளையே கவலையாய் பார்த்தாள். புனிதா நெகுநெகுவென்று புஷ்டியாய் வளர்ந்திருந்தாள். ஜனனிக்கு எந்தவிதத்திலும் குறைசொல்ல முடியாத அழகு!

கல்மேடை மீது அமர்ந்து கண்ணை மூடிக்கொண்ட ஜனனிக்கு ஆயாசமாக இருந்தது.

## 4

சர்வீஸிற்கு விட்டிருந்த வண்டியை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வருகையில் ஜனனி தன் வீட்டை விட்டு வெளியே வந்துகொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்ததும் வண்டியை நிறுத்திய முகேஷ் "ஹலோ..." என்றான்.

"ஹலோ குட்மார்னிங்" என்றாள் ஜனனி.

"என்னங்க... அரை மணி நேரம் முன்னதாகவே கிளம்பிட்டீங்க போலிருக்கே" என்றான் ஆச்சரியமுடன்.

"வேற வழி? இனி சீக்கிரமா போய்தான் ஆகனும். எத்தனை நாளைக்குதான் லேட்டாப் போறதுக்கு பாட்டு வாங்கிக் கட்டிக்கறது?"

"உங்களை நினைச்சாலே கஷ்டமாயிருக்கு."

"உங்க ஆபீஸ்ல புதுசா கம்ப்யூட்டர் வாங்கப் போறதா சொன்னீங்களே... வாங்கியாச்சா?"

"இன்னும் இல்லேங்க..." கூசாமல் பொய் சொன்னாள்.

ஜனனி தன் அலுவலகத்தில் பணிபுரிவதில் இப்போது துளியும் விருப்பமில்லை அவனுக்கு! கௌதம் என்னும் கொக்கு இந்த மீனுக்காக காத்திருக்கிறதே!

முகேஷ் கைநிறைய சம்பாதிப்பவன்தான். குடும்பமும் ஓரளவு வசதியானதுதான். கூடப்பிறந்த இரண்டு சகோதரிகளை திருமணம் செய்து மூட்டைகட்டி அனுப்பிவிட்டான். அவன் விருப்பத்திற்கு மறுப்பு சொல்லாத பெற்றோர். எனவே, ஜனனியை மணமுடிப்பதாக சொன்னால் சந்தோஷமாக ஆசீர்வதிப்பார்கள். ஏனென்றால் அவன் அம்மாவிற்கு ஜனனியை மிகவும் பிடிக்கும்.

'இத்தனை சிறிய வயதில் எத்தனை பொறுப்புகளை சுமந்து கொண்டிருக்கிறாள்? அந்த பொறுமையும், விவேகமும். இந்த காலத்து பெண்களிடம் காண்பது அரிது. அவள் அழகிற்கும், குணத்திற்கும் எந்த ஊர் ராஜகுமாரனுக்கு வாய்த்திருக்கிறதோ?' என்று அடிக்கடி அம்மா கூறுவதை கேட்கும்போதெல்லாம், முகேஷிற்கு நா துடிக்கும். 'அந்த ராஜகுமாரன் 'வேறு யாருமல்ல, நான்தாம்மா!' என்று.

ஜனனி மீது முகேஷ் உயிரையே வைத்திருந்தான். ஆனாலும் தன் மனதை வெளிக்காட்டாமல் ஜாக்கிரதையாய் இருந்தான். அதற்கெல்லாம் சமய சந்தர்ப்பம் வாய்க்க வேண்டுமே!

முகேஷ் ரொம்பவே நம்பிக்கையோடிருந்தான்.

ஜனனி எனக்குத்தான். அவள் என்னை காதலிப்பாள். இந்த தெருவில் வேறு யாரிடமும் பேசாத, பழகாத ஜனனி என்னிடம் மட்டும் பழகுகிறாள் என்றால் என்மீது அவளுக்கும் ஒரு பிடிப்பு இருக்கிறது என்றுதானே அர்த்தம்! இந்த நிலையில் கௌதம் இடையில் புகுந்து குட்டையை குழப்பிவிடக் கூடாதே!

முன்னே பின்னே ஒரு வார்த்தை பேசியதில்லை. இவனுக்கு அவள்மீது எங்கிருந்து வரும் காதல்?

நல்லவேளை... ஜனனி வழக்கத்தைவிட முன்னதாகவே கிளம்புகிறாள். படவா, இனி அவன் எப்படி பார்ப்பான்? பஸ் ஸ்டாண்டில் நின்று காத்திருந்து போகட்டும்! மனம் குதூகலித்தது.



"நான் வரட்டுமா... நேரமாச்சு?" என்று கேட்டுவிட்டு அவனைத் தாண்டி போனாள் ஜனனி.

அவளிடமிருந்து வெளிப்பட்ட பூ பவுடர், கலந்த கதம்ப மணம் முகேஷின் நாசியைத் தொட்டது. மூச்சை உள்ளிழுத்து சுகமாய் ரசித்தான்.

திலகா இண்டர்நேஷனல்!

தூரத்திலிருந்து பார்க்கும்போதே பித்தளை போர்டு தகதகத்தது.

இரண்டு மாடி கட்டிடம் அது! அலுவலகம் சுற்றி பூங்காபோல பசுமையான தோட்டம். சின்னச்சின்ன அழகான பூச்செடிகள். அளவைத் தாண்டி வளரவிடாமல் வெட்டி சீர் செய்யப்பட்டிருந்தது. நடுவில் கம்பி தடுப்பு போட்டு செயற்கை நீரூற்று அமைத்திருந்தார்கள்.

அத்துமீறி யாரும் உள்ளே நுழைந்துவிட முடியாதபடி கூர்க்கா கேட் வாசலிலேயே கண் கொத்தி பாம்பாய் கவனமாய் இருப்பான்.

அலுவலகப் பணியாளர்களின் இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனம் நிறுத்துவதற்கென்று பின்புறம் பெரிதாய் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

'பார்த்தால்... இப்படிப்பட்ட அலுவலகத்தில் அல்லவா வேலை பார்க்க வேண்டும்' என்று யாரையுமே பெருமூச்செறிய செய்யும் அழகிய தோற்றம் கொண்டது.

ஊழியர்களுக்கு குறைசொல்ல முடியாத அளவில் சம்பளம், போனஸ், அலவன்ஸ் என்று வாரி வழங்கியது நிறுவனம்.

நிறுவனத்தின் உரிமையாளர் சங்கரன்! குடும்பத்தோடு கனடாவில் வசிக்கிறார். அங்குள்ள கிளைக் கம்பெனி அவர் பொறுப்பில்தான் உள்ளது. ஒரே ஒரு செல்ல மகன் அவருக்கு. பெயர் நித்திலன்.

கௌதமைப் பார்த்ததும் சலாம் வைத்து கேட்டைத் திறந்தான் கூர்க்கா.

வண்டியை பார்க் செய்துவிட்டு உள்ளே நுழைந்த கௌதமின் முகம் வாடிப்போயிருந்தது.

முகேஷ் அவனை கவனிக்கத் தவறவில்லை. உள்ளுக்குள் சந்தோஷம் பொங்கியது.

கௌதம் - அவனின் உயிர்த்தோழன்தான். அம்மா, அப்பா இன்றி ஹாஸ்டலிலேயே படித்து வளர்ந்த அவன்மீது பரிதாபமான பாசமுமிருந்தது. அவனுக்காக எந்த உதவியும் செய்ய தயாராக இருந்தான். ஆனால் உயிரைக் கொடுக்க தயாராக இல்லை. அவன் உயிர் ஜனனியாயிற்றே!

"முகேஷ்... கொஞ்சம் வாயேன்!" இண்டர்காமில் அழைத்தான் கௌதம்.

எதிர்பார்த்தவனாய் எழுந்து போனான்.

"முகேஷ்... வந்து..."

"என்ன கௌதம்? சொல்லு!"

"பத்து நாளா ஜனனிய பஸ் ஸ்டாண்ட்லகூட பார்க்க முடியல ஏன் முகேஷ்? அவளுக்கு உடம்பு சரியில்லையா? இல்லே... வேலையை

திலைக் பண்ணிட்டானா? என்ன ஆச்சு முகேஷ்?" கௌதம் கவலையாய் கேட்டான்.

"இங்கே பாரு கௌதம்! ஜனனி எங்க தெருவிலே வசிக்கிறவதான். இல்லேங்கலே. அதுக்காக, அவ ஏன் வரலே, எதுக்கு வரலேன்னுல்லாம் போய் கேட்டுக்கிட்டிருக்க முடியுமா? அது அநாகரிகமில்லையா?"

"ஸாரி... முகேஷ். உனக்கு தெரிஞ்சிருக்கும்னு நினைச்சேன். ஒரு ஹெல்ப் பண்ணுவியா?"

"என்ன... என்னை தூதுவிடப் போறியா?"

"சேச்சே... நான் உங்க வீட்டுக்கு வரட்டுமா?"

"வந்து! இதப்பார்... இதெல்லாம் சரியில்லே. இதுக்கு முன்னால உன்னை எத்தனையோ முறை எங்க வீட்டுக்கு கூப்பிட்டிருக்கேன். அப்பவெல்லாம்... எதையாவது காரணம் சொல்லி வராமலிருந்தவன். இப்ப நீயா வாரேன்னு சொல்றதுக்கு என்ன காரணம்னு புரியாம இல்லை. எங்கம்மாவுக்கு இந்த மாதிரியெல்லாம் பிடிக்காது."

"நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படியெல்லாம் பேசறே? ஜஸ்ட் அவ வீட்டையாவது பார்த்து ஆறுதல் அடையலாம்னு கேட்டேன். என்னமோ முகேஷ். நீ முன்னே மாதிரி இல்லே. என்னை விட்டு விலகிப் போயிட்டே!"

"சேச்சே... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே! ஜனனி விஷயத்தில நீ அளவுக்கதிகமா மூக்கை நுழைக்கிறதுதான் எனக்கு பிடிக்கலே!" முகேஷ் ஆறுதலாய் அவன் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

"இட்ஸ்... ஓக்கே!" தட்டிக்கொடுத்த கரத்தை தன் கரத்தால் மென்மையாய் அழுத்தினான்.

அதே நேரம் கௌதமின் டேபிள் மீதிருந்த இண்டர்காம் அலறியது.

எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

"எஸ்... ஸார்..."

"____"

"இதோ வந்துட்டேன் ஸார்!" ரிசீவரை அதனிடத்தில் வைத்துவிட்டு எழுந்தான்.

"என்ன கௌதம்?"

"ஜி.எம். கூப்பிடறார்..." என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

முதல் மாடியில் இருந்தது ஜி.எம்.மின் அறை.

ஐந்து நட்சத்திர ஓட்டலின் டீலக்ஸ் ரூம் போன்ற தோற்றம்.

சில்லென்ற ஏசிக் காற்றோடு கலந்து வரும் சுகந்தமான லாவெண்டர் மணம் அறைக் கதவைத் திறந்ததும் முகத்தில் மோதும்.

"வாங்க கௌதம்" வரவேற்ற ஜி.எம்.மிற்கு ஐம்பதைத் தாண்டிய வயது. காட்டனுக்கு மேட்ச்சாய் ரோஸ் நிறத்தில் பளபளத்த வழுக்கை. கண்ணியமான தோற்றம். டேபிள்மீது நிறத்திற்கொன்றாய், வகைக் கொன்றாய் பேனாக்கள்.

ஏதோ ஒரு ஃபைலை பிரித்து வைத்திருந்தவர் அவனைப் பார்த்ததும் மூடி வைத்தார்.

"உட்காருங்கள் கௌதம்."



"தாங்க்யூ ஸார்!" அமர்ந்தான்.

"கம்ப்யூட்டரை பார்த்தீர்களா?"

"பார்த்தேன் ஸார்!"

"உங்க அறையிலேதான் வைக்கப் போகிறோம். இடவசதி எப்படி?"

"தாராளமாய் இன்னும் இரண்டு கம்ப்யூட்டரை வைக்கக்கூடிய அளவில் விசாலமாகவே உள்ளது" என்றபடி சிரித்தான்.

"ம்ஹூம்... உங்களுக்கு ஒரு அஸிஸ்டண்ட் போதும் கௌதம்" என்று கூறிவிட்டு சிரித்தார் ஜலேந்திரன். அதுதான் அவர் பெயர்.

"அப்புறம் கௌதம். ஹிண்டுல இந்த வாரம் ஒரு அட்வர்டைஸ்மெண்ட் கொடுத்துடுங்க. உங்க அஸிஸ்டண்ட் வேகன்டுக்குத்தான். தென் ஒரு முக்கியமான விஷயம்."

"சொல்லுங்க ஸார்!"

"நம்ம எம்.டி. குடும்பத்தோட இண்டியாவுல வந்து செட்டிலாகிற மாதிரி ஒரு டாக் இருக்கு."

"நிஜமாவா?"

"வந்தா... இந்த கம்பெனி பொறுப்பைத்தான் ஏத்துக்குவார்னு நினைக்கிறேன். எப்படியும் இதைப்பற்றி ஆதாரப்பூர்வமான செய்தி இன்னும் பத்து நாள்ல தெரிஞ்சிடும்."

"ஓ.கே. கௌதம். நீங்க... இன்னைக்கே ஹிண்டுவை காண்டாக்ட் பண்ணி விளம்பரம் கொடுத்திடுங்க."

"ஓ.கே. ஸார்!" என்று பவ்யமாய் எழுந்து வெளியில் வந்தான்.

பூக்கடையிலிருந்த 'கிப்ட் சென்டருக்'குள் நுழைந்தாள் ஜனனி.

பெரிய கடை! பளிச்சென்ற விளக்குகளின் உதவியோடு, பளீரென பார்த்ததும் கண் கூச வைத்தன பொருட்கள். எல்லாவிதமான பொருட்களும் கிடைக்கும். அதனால் எப்போதும் கூட்டமிருந்தது.

ஜனனியின் அத்தை மகளின் ஒரு வயது குழந்தைக்கு பிறந்த நாள்! அதற்காக பரிசுப் பொருள் வாங்க வந்திருந்தாள்.

எதை எடுப்பது என்று திணறிப்போனாள். கடைசியில் குழந்தைக்கு வேறென்ன கொடுக்க முடியும்? என்று ஒரு பெரிய அழகிய மார்வாடிப் பெண் பொம்மையை பேக் பண்ண சொன்னாள்.

"ஹலோ... சிஸ்டர்" பின்னாலிருந்து ஆச்சரியமான குரல் கேட்க திரும்பிப் பார்த்தாள்.

இளவயதுப் பெண்! மிடியில் சிக்கென்றிருந்த அவளை எங்கோ பார்த்த நினைவு. ஆனால், சட்டென நினைவிற்கு வரவில்லை. என்றாலும் புன்னகைத்தாள்.

"என்ன சிஸ்டர் சங்கடமா சிரிக்கிறீங்க? என்னைத் தெரியவில்லையா?" பளிச்சென முகத்திற்கு நேரே கேட்கவும் சற்றே திணறித்தான் போனாள் ஜனனி.

"ஸாரி... உடனே நினைவுக்கு வரலே" நெளிந்தாள்.

"இட்ஸ் ஓக்கே! ஐ'ம் ப்ரீதா... நவ், டு யூ ரிமெம்பர் மீ?"

"ஓ... வெல்... வெல்... புனிதாவோட ஃப்ரெண்ட்தானே? எப்படியிருக்கே பரீதா? வீட்லே எல்லோரும் நல்லாருக்காங்களா?"

"கோஸ்... ஓகே! நீங்க நல்லாருக்கீங்களா?"

"ம்... நல்லாருக்கேன்! என்ன கை நிறைய பார்சல் யாருக்காச்சும் பிரசண்ட் பண்ணப் போறியா?"

"நோ... நோ... அத்தனையும் எனக்கு! அடுத்த வாரம் எனக்கு பர்த்டே! அதுக்காகத்தான் நிறைய டிரஸ் வாங்கினேன்" பரீதா சொல்லிக்கொண்டே போக ஜனனிக்கு அடுத்து பேசிய எதுவும் காதில் விழவில்லை.

'புனிதா... ஏன் பொய் சொன்னே? பொய் சொல்ற அளவுக்கு உன்னிடம் என்ன ரகசியம் இருக்கு? ஜனனி குழப்பத்தின் பிடியில் சிக்கிக்கொண்டாள்.

## 5

முகேஷிற்கு எதுவும் புரியவில்லை.

ஒன்றுமில்லை.

அவசரமாய் ஆபிஸ்க்கு புறப்பட்டுக்கொண்டிருந்த ஜனனியின் எதிரே எதேச்சையாய் வந்த முகேஷ், வழக்கம்போல "ஹலோ" என்றான்.

அவளும் வழக்கம்போல 'ஹலோ குட்மார்னிங்' என்று பூவாய் சிரித்தபடி சொல்வாள் என எதிர்பார்த்தவன் எண்ணத்தில் மண்தான் விழுந்தது.

வெறும் 'ஹலோ' என்று பதிலுக்கு உரைத்துவிட்டு, அதுவும் சலனமற்ற முகத்தோடு முன்பின் அறிமுகமில்லாத ஒரு நபரிடம் பேசுவதுபோல் சொல்லிவிட்டு ஒரு கணம்கூட நிற்காமல் அவள் பாட்டிற்குப்போனது முகத்தில் அடிப்பதுபோல் இருந்தது.

ஜன்னிக்கேக்கூட முகேஷை நினைத்தால் ஆச்சர்யமாக இருந்தது.

எப்படி பழகினான்? எவ்வளவு மரியாதையோடு நானும் பழகினேன். இவனுக்கு என்ன கெடுதல் செய்தேன் என்று இப்படி நடந்துகொண்டான்? எனக்காக வேலைக்கு பல இடங்களில் சொல்லி வைத்திருக்கிறேன் என்றதெல்லாம் பொய்! இல்லாவிட்டால், தன் கம்பெனியிலேயே வேலைக்கு ஆள் தேவை என்ற உண்மையை மறைப்பானா? அந்த வேலை தனக்கு கிடைக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம். ஆனால், நானாக எத்தனை முறை வெட்கத்தை விட்டு கேட்டிருக்கிறேன்? சே! முகேஷ் இப்படிப்பட்டவனா? எதற்காக என்னிடம் மறைத்தான். நல்லவேளை அந்த விளம்பரம் என் கண்ணில் பட்டது. அப்ளை பண்ணி இன்டர்வியூவுக்கு வரச்சொல்லி கடிதமும் வந்துவிட்டது. இந்த விஷயம் முகேஷிற்கு தெரியக்கூடாது. அவன் அலுவலகத்திற்கு அவன் முன்னே இன்டர்வியூவுக்கு போய் நிற்க வேண்டும். அப்போது அவன் முகம் போகிற போக்கைப் பார்க்க வேண்டும். மனதிற்குள் கறுவிக் கொண்டாள் ஜனனி.

பஸ் ஸ்டாண்டில் கூட்டம் அதிகமில்லை.

கண்கள் தன்னிச்சையாய் அவனைத் தேடியது. சற்று முன்னதாக கிளம்பிவிடுவதால்... அவனைப் பார்க்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்த மனதுக்கு தன்னை நினைத்து ஆச்சரியமாக மட்டுமல்ல... சிரிப்பாகவும், அவமானமுமாக உணர்ந்தாள்.



அவனைப் பார்க்கும்போதெல்லாம் பொருமி, அப்படி இப்படி என்று கோபப்பட்ட தான் இப்போது அவனைக் காண ஆவல் கொண்டது ஏன்? இனக்கவர்ச்சியா?

அப்படியென்றால்... முகேஷும் அழகான ஆண்தான். அவன்மீது இப்படியொரு இனக்கவர்ச்சி ஏற்பட்டதில்லையே! என்ன இது! மனித மனம் இத்தனை விந்தையானதா! சிரித்துக்கொண்டாள்.

தன் சீட்டில் அமருமுன் அவனுக்கு செய்தி காத்திருந்தது.

"ஸார்... நீங்க வந்தவுடனே ஜி.எம். போன் பண்ணச் சொன்னார். அவருக்கு உடம்பு சரியில்லையாம். வீட்லேதான் இருக்காராம்."

அக்கவுண்டண்ட் ஏகாம்பரம் சொன்னதும் முகம் மாறியது கௌதமுக்கு.

'அடக்கடவுளே! இந்த மனுஷனுக்கு இன்னைக்குப் பார்த்தா உடம்புக்கு முடியாமப் போகும்? இன்னைக்குதானே இன்டர்வியூ இருக்கு' அத்தனை காண்டிடேட்ஸும் வந்திருப்பாங்களே.'

"ஏன் ஸார்! இன்டர்வியூவிற்கு ஆட்கள் வந்திருக்காங்களா?"

"இன்னும் ரெண்டு பேர்தான் வரலை. பாக்கி பத்துபேர் வந்தாச்சு. அதோ அந்த ரூம்லதான் உக்கார வச்சிருக்கோம். அத்தனை பேரும் லேடீஸ். சும்மா லட்டு லட்டா..."

"ஸார்... உங்களுக்கு ஏற்கனவே ஸ்வீட் கம்ப்ளைண்ட் இருக்கறப்ப... லட்டு பத்தி ஏன் நினைச்சுப் பார்க்கறீங்க?" கௌதம் கிண்டலாய் சொன்னான்.

"ஹும்... உங்களுக்கு இளவயசு. இதிலேர்ந்து ஒரு லட்டை செலக்ட் பண்ணி உங்களுக்குத்தான் தரப்போறாங்களாமே!" பெருமூச்சு விட்டார் ஏகாம்பரம்.

கௌதம் வாய்விட்டு சிரித்தபடி ஜி.எம்.மிற்கு போன் பண்ணினான்.

உடம்பிற்கு திடீரென்று காய்ச்சல் வந்துவிட்டதால் தன்னால் இன்னும் மூன்று நாட்களுக்கு அபீஸ் வாசலில் கால் வைக்க முடியாது இன்டர்வியூவை அவனையே நடத்தி, திறமையான நபரை செலக்ட் பண்ணுங்க' என்று கூறிவிட்டார்.

வேறு வழியின்றி அட்டெண்டரை விட்டு ஜி.எம். ரூமில் இருந்த இன்டர்வியூ கேண்டிடேட்ஸ் ஃபைலை எடுத்துவரச் செய்தான்.

நூற்றுக்கணக்கில் வந்திருந்த விண்ணப்பங்களை வடிகட்டி பன்னிரெண்டு பேர்களை தேர்வு செய்து நேர்முகத் தேர்விற்கு வரச்சொல்லி யிருந்தனர்.

பன்னிரெண்டு பேர்களின் ஜாதகத்தையும் ஐ மீன் பயோடேட்டாவை ஆராய்ந்தான்.

அதில் எழெட்டு பேர்களின் சான்றிதழ்களில், முன் அனுபவத்தில் அப்போதே அதிருப்தி எழுந்தது.

பத்தாவது இடத்தில் இருந்த பெயர்தான் அவனை ஷிராக வைத்தது.

ஜனனி - என்ற பெயர்.

அவளா? முகவரியைப் பார்த்தான்.

அந்த ஏரியாதான். ஆனால் முகேஷ் இருந்த தெருவின் பெயர் நேதாஜி தெரு என்பதாக நினைவு. இவள் முகவரியில் சிங்கார வேலர் தெரு என்றல்லவா இருக்கிறது. தவிர, அவள் எங்கோ பணிபுரிந்து கொண்டிருப்பதாக முகேஷ் அன்று பேச்சுவாக்கில் சொன்னானே! அப்படியிருக்க அவள் எப்படி இங்கு அப்ளை பண்ணுவாள்?

'மடையா! பாதி பேர்... வேறு கம்பெனியில் பணிபுரிந்துக் கொண்டிருப்பவர்கள்தானே வந்திருக்கிறார்கள்? முன் அனுபவம் என்ற இடத்தில் எழுதப்பட்டிருப்பதை மறுபடி படி' உள்ளிருந்து எகத்தாளமாய் ஒரு குரல் கேட்டது.

ஒருவேளை... இந்த ஜனனி அவள்தான் என்றால்... இந்தவேலை அவளுக்குத்தான்! அப்போதே முடிவு செய்தான்.

'ஏண்டா பாவி! இது தப்பில்லையா? உனக்கு வேண்டியவள் என்றதும் மனசாட்சியை கொன்று மற்ற பதினோரு பேர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு நடப்பது சரியா?'

'ஏன், ஜனனிக்கு மட்டும் தகுதியில்லையா என்ன? நல்ல படிப்பு, திறமை, அனுபவம், அந்த சீட்டில் உட்கார தகுதியான அழகு... எல்லாமே அவளிடம் உள்ளதே! ஒருவேளை ஜனனிக்கு இந்த வேலை கிடைக்க வேண்டும் என்றுதான் ஜி.எம்.மிற்கு இன்றைக்குப் பார்த்து காய்ச்சல் வந்ததோ? எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும். அந்த அதிர்ஷ்டம் ஜனனிக்கு இருக்கும்போது... யாரை நொந்து என்ன பயன்?' மனசாட்சியின் தலையில் தட்டி அதை அமரவைத்தான் கௌதம்.

அடுத்து, நேர்முகத் தேர்விற்கு வந்தவர்களை ஒவ்வொருவராய் உள்ளே அனுப்பச் சொன்னான்.

அவன் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல சிலர் தடுமாறினர். சிலர் டானென்று சரியான பதில்களை சொன்னாலும், எக்ஸ்பீரியன்ஸ் இல்லை, டிகிரி முடிக்கவில்லை என்று பிளாக் மார்க்தான் விழுந்தது.

பத்தாவது ஆளாய் உள்ளே நுழைந்த ஜனனி... அவன் எதிர்பார்த்தது போலவே அதே ஜனனியாக இருந்ததில்... திகைப்பில் மூச்சுவிட மறந்தான்.

அவன் மட்டுமென்ன?

கௌதமைவிட பலமடங்கு அதிர்ச்சியின் பிடியில் சிக்கிக் கொண்டிருந்தாள் ஜனனி.

'இவனா! இங்கு மேனேஜரா?' குப்பென்று ஒரு செயற்கை நீரூற்று அவள் இதயத்தில் எழுந்து பூச்சொரிந்தது.

தன்னை கஷ்டப்பட்டு இயல்பான நிலைக்குக் கொண்டு வந்தான் கௌதம்.

"மிஸ்... ஜனனி?"

"யெஸ்... நான்தான்!"

"ப்ளீஸ்... சிட் டவுன்!"

அமர்ந்தாள்.

"வேற அலுவலகத்திலே இப்ப வொர்க் பண்ணிட்டிருக்கீங்களா மிஸ் ஜனனி?"



"ஆ... ஆமாம்!" அவனை மிக நெருக்கமாய் பார்த்ததில் என்னவோப் போலிருந்தது.

'எவ்வளவு கம்பீரமாய் இருக்கிறான்?'

"ஏன் நெர்வஸ்ஸா இருக்கீங்க! ரிலாக்ஸ் மிஸ் ஜனனி! எந்த ஆபீஸ்லே வொர்க் பண்ணிட்டிருக்கீங்க?"

"அமராவதி பப்ளிகேஷன்ஸ்"

"எங்க அலுவலகத்திலே பணிபுரிய விரும்புவதன் காரணம்?"

"நல்ல கம்பெனி, திறமையை வெளிப்படுத்த ஒரு சான்ஸ் என்றெல்லாம் ரெடிமேடாய், ஆர்ட்டிபிஷியலாய் ஒரு பதிலை சொல்ல எனக்கு விருப்பமில்லை. நிஜமான ஒரே ஒரு காரணம், அதிகமான சம்பளம்! என்னை நம்பிட்டிருக்கிற மூணு ஜீவன்களை காப்பாத்த எனக்கு அந்த சம்பளம் போதலை. அவ்வளவுதான்."

"ஓ.கே... மிஸ் ஜனனி! வெளியே வெய்ட் பண்ணுங்க அடுத்து ரெண்டு பேரை எக்ஸாம் பண்ணிட்டு எங்க முடிவைச் சொல்றோம்!"

பரிச்சயமானவன்போல் தன்னைக் காட்டிக்கொள்ளாத அவனின் நாகரிகம் அவளுக்கு பிடித்திருந்தது.

சரியாய் ஒருமணி நேர அவகாசத்திற்கு பின் ஜனனிக்கு அவள் தேர்வான விஷயம் சொல்லப்பட்டு, அப்போதே அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டரும் தரப்பட்டது. ஜனனிக்கு ஆனந்தக் கண்ணீர் வந்தது.

'ஒருவேளை... இவன் எனக்காக இந்த வேலையைத் தந்தானா? அல்லது நிஜமாகவே திறமையின் அடிப்படையில்தானா?' ஜனனிக்கு அந்த சந்தேகம் எழுந்தது. என்றாலும், இரண்டில் எதுவாய் இருந்தாலும் அவளுக்கு சந்தோஷமே! எப்படியிருப்பினும் என்னிடம் படிப்பும், திறமையும் இருக்கிறதே! எத்தனையோ கம்பெனியில் எனக்கு வேலை கிடைத்ததே! சம்பளம் குறைவு என்பதால்தானே... அத்தனையும் தட்டிக் கழித்தேன்.

ஆனால், நிஜமாகவே, வந்திருந்தவர்களில் ஜனனிக்குதான் அதிக மார்க் கிடைத்தது. ஜலேந்திரன் இண்டர்வியூ நடத்தியிருந்தாலும் அவரும் நிச்சயம் ஜனனியைதான் தேர்ந்தெடுத்திருப்பார் என்பதும் உண்மை!

ஜனனிக்கு பெரிய சுமையொன்று தோளை விட்டு இறங்கியது போல் மனம் லேசாகிப் பறந்தது.

அதேநேரம், அதுநேரம் வரை முகேஷ் கண்களில் படவில்லை என்பது உறைத்தது.

"கங்க்ராஜுலேஷன்ஸ் மிஸ் ஜனனி! நீங்கள் நாளை முதல் வேலையில் ஜாய்ன் பண்ணலாம்! இதோ... இதுதான் உங்கள் காபின்" கௌதம் புன்னகையுடன் அவளை வாழ்த்தி தனது அறையிலேயே ஒரு பகுதியை தடுத்து தனி காபினாக மாற்றப்பட்டிருந்த இடத்தை சுட்டிக் காட்டினான்.

அடக்கமாய், அழகாய் இருந்தது அவளுக்கு ஒதுக்கப்பட்ட இடம். கம்ப்யூட்டர் அருகிலேயே ஒரு போன்! கண்ணை உறுத்தாத விதத்தில் அருவி கொட்டும் மலைமுகடுகளோடு வால் போஸ்டர்.

உட்கார்ந்திருந்தாலும் அவள் முகம் கௌதமிற்கு தெரியும் வாக்கில் போடப்பட்டிருந்த குஷன் சேர்.

ஜனனியைவிட கௌதமிற்குதான் சந்தோஷம் கரைபுரண்டுக் கொண்டிருந்தது.

கைக்கெட்டா தொலைவில் கண் சிமிட்டிக் கொண்டிருந்த நட்சத்திரம், இன்று இதோ, என் இடத்தில்! என்னவள்... என்னருகில்!

முகேஷ் பயங்காட்டியதைப் போலெல்லாம் ஒன்றும் நடக்கப் போவதில்லை.

இதோ, இப்போது எனக்கே அஸிஸ்டெண்டாக வந்திருக்கிறாளே! இதை அவனால் தடுக்க முடியுமா?

உடனே இந்த விஷயத்தை அவனுடன் பகிர்ந்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

அட்டெண்டரிடம் முகேஷ் வந்துவிட்டானா? என்று விசாரித்தான். அவன் சேல்ஸ் எக்ஸிகியூடிவ் என்பதால்... எப்போதும் ஆபீஸில் இருக்க முடியாது.

அப்போதுதான் வந்திருக்கிறான் என்று பதில் வந்ததும் இண்டர்காமில் அழைத்தான் கௌதம்.

"ரொம்ப டயர்டா இருக்கு. என்ன விஷயம்?"

"ப்ச்... வந்துதான் பாரேன்! என் அஸிஸ்டெண்டை செலக்ட் பண்ணியாச்சு. ஆளைப் பார்த்தினா அசந்திடுவே"

"அப்பேர்ப்பட்ட ரம்பையா?"

"அதைவிடவும்..."

"அட... அப்படியொரு அழகியா? மாப்பிள்ளே... உனக்கு மச்சம்டா... இதோ வந்துட்டேன்!"

முகேஷ் ஆர்வமாய் வந்தான்.

கௌதம்... மெல்ல அவளை அழைத்து அறிமுகப்படுத்தினான்.

"இவங்க மிஸ் ஜனனி! என்னோட புது அஸிஸ்டெண்ட்! ஜனனி... இவர் மிஸ்டர் முகேஷ்! நம்ம கம்பெனியோட சேல்ஸ் எக்ஸிகியூடிவ் மட்டுமல்ல... என்னோட க்ளோஸ் ஃப்ரெண்டும்கூட!"

ஜனனி முகேஷை இரு கரம் கூப்பி வணக்கம் சொன்னாள். அவள் கண்களில் அலட்சியம் இருந்தது. ஆனால், முகேஷின் கண்களில் அதிர்ச்சி வெடித்தது.

## 6

அந்த அலுவலகத்தில், சேர்ந்து இருபது நாட்கள் ஓடிவிட்டன. ஜனனிக்கு அந்த அலுவலகம், சூழ்நிலை, எல்லாவற்றிற்கும் மேலாக கௌதம்... எல்லாமே பிடித்திருந்தது.

தன் அலுவலகத்திற்கும் அதுவும் தனக்கே அஸிஸ்டெண்டாக அவள் வருவாள் என்று கௌதம் நினைத்துப் பார்த்திராத ஒன்று. இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால்... நிச்சயம் பஸ் ஸ்டாண்டில் ரோமியோபோல் அவளை சைட் அடித்திருக்கமாட்டான். இப்போது தன்னைப்பற்றி அவள் என்ன நினைப்பாளோ? என்கிற கவலை கௌதமை அரித்துத் தின்றது.





முகேஷ் பற்றி சொல்லவே வேண்டாம். அவன் நிலைதான் பரிதாபத்திற்குரியதாகிவிட்டது.

மனதிற்குள் ஜனனிக்கு அவன் தாஜ்மஹால்கூட கட்டிவிட்டான். அந்தளவு அவளை நேசித்தான். கௌதமின் பார்வைகூட அவள்மீது படுவதை விரும்பாததால்தான் அவனை எச்சரித்தான். அந்த அலுவலகத்தில் வேகன்ஸி இருந்தும் அவளுக்கு தெரியப்படுத்தலாம் இருந்தான். தன் காதலுக்கு எந்த பங்கமும் வரக்கூடாது என்று தன் காதல் கோட்டையைச் சுற்றி தீக்கங்குகளை எரியவிட்டான். ஆனால், அந்த நெருப்பே இன்று அந்த கோட்டையை விழுங்கத் தொடங்கி விட்டதைதான் ஜீரணிக்க முடியவில்லை.

'கூடாது! எனக்குக் கிடைக்காத ஜனனி இவனுக்கும் கிடைக்கக் கூடாது! இந்த முகேஷ் யாரென்று காட்டுகிறேன். உன் சந்தோஷம் எத்தனை நாட்களுக்கு? எண்ணிக்கொண்டிரு நண்பா!' கறுவிக்கொண்டான் முகேஷ்.

**உ**ள்ளே நுழைந்த கௌதமை பார்த்ததும் குட்மார்னிங் சொன்னாள் ஜனனி.

பதிலுக்கு குட்மார்னிங் சொல்லக்கூட முடியாதபடி திணறிப் போனான் கௌதம். காரணம் ஜனனியின் அழகு.

ஆகாய நிறத்தில் வெள்ளை பூக்கள் சிதறிய ஷிபான் சேலையும், மேட்ச்சாய் ப்ளவுஸும் அணிந்திருந்தாள்.

தலை குளித்து தளர்வாய் பின்னிய கூந்தலில் மல்லிகைச்சரம் தோள் வழியே எட்டிப் பார்த்த கவிதையான அழகு. சிறியதாய் ஜிமிக்கி, மெல்லிய செயின். சிறிய வட்ட வடிவப் பொட்டிற்கு மேலே சந்தனக்கீற்று. மாருதியின் ஓவியப் பெண் போலிருந்தாள்.

"சார்... குட்மார்னிங்!" மறுபடியும் ஜனனி சொல்லவும், திடுக்கிட்டு இயல்புக்கு திரும்பினான்.

"குட்மார்னிங் ஜனனி!" என்று புன்னகைத்துவிட்டு அவன் சீட்டில் போய் அமர்ந்தான்.

அமர்ந்த உடனே பெட்டியைத் திறந்து சில கணங்கள் கண்மூடி வணங்குவதை பார்த்த ஜனனி வியப்பாய் அவனையே பார்த்தாள்.

அவள் இங்கு வந்தது முதலே கௌதமின் இந்த வழக்கமான நடவடிக்கை அவளுக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.

யாரை வணங்குகிறான்? கடவுளையா? கேள்வி எழுந்தது. கூடவே அவன்மீது மதிப்பும் அதிகரித்தது. பஸ் ஸ்டாண்டில் தினசரி வந்து வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த அவனை அப்போது தவறாய் எடை போட்டதற்கும், அதற்கு மாறான நடவடிக்கையும் கொஞ்சம் சந்தேகத்தையும் எழுப்பியது.

எது நிஜ உருவம்? இதுவா? அதுவா?

ஆனாலும் ஒரு விஷயம் உறுத்தியது. இத்தனை நாளாயிற்று இங்கு வந்து சேர்ந்து! ஆனால் அலுவல் அல்லாத வேறு வீணான பேச்சுக்கள் இல்லை. அந்தளவு ஜெண்டிலாக நடந்துக் கொண்டான்.

காதலின் சக்தியைவிட விதியின் சக்தி வலியது என்பதை மறந்து போனான் பாவம்!



**அ**லுவலகம் முடிந்து பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்த ஜனனியை பாதி வழியில் மடக்கினான் முகேஷ்.

'என்ன?' என்பதுபோல் பார்த்தாள் ஜனனி. முகத்தில் கோபம் உற்பத்தியாகத் துவங்கியது.

"ஜனனி...நான் உங்ககிட்டே பேசணும்!"

"பேசுங்களேன்!"

"ஒரு ரெஸ்டாரெண்ட் போய் காபி சாப்பிட்டுக்கிட்டே..."

"ஸாரி... அதற்கெல்லாம் எனக்கு அவகாசமில்லை. இங்கேயே பேசுங்கள்" கண்டிப்புடன் வந்து விழுந்தன வார்த்தைகள்.

"ஜனனி, இது ரோடு! அட்லீஸ்ட் அந்த பார்க்கிலாவது போய் பேசலாமே!" அவன் வற்புறுத்தவும் வேறு வழியின்றி போனாள்.

"ஜனனி... என்கிட்டே ஏன் பேசமாட்டேங்கறீங்க?"

"உள்ளொன்று வைத்த புறமொன்று பேசுபவரிடம் என்னவென்று பேசுவது?"

"நான் அப்படிப்பட்டவனா?"

"அதை உங்கள் நெஞ்சில் கை வைத்துக் கேளுங்கள்"

"கேட்டேனே! அது ஜனனி, ஜனனி என்று உங்கள் பெயரைத்தவிர வேறெதையும் சொல்லவில்லை..."

"மு...கே...ஷ்...!" அதிர்வாய் பார்த்தாள் ஜனனி.

"இதுதான் நிஜம் ஜனனி! நான் உங்களை நேசிக்கிறேன். அதனால்தான் நான் எங்கள் ஆபீஸில் வேகன்ஸி இருந்ததைக்கூட தெரியப்படுத்தவில்லை... காரணம் கௌதம்!"

"கௌதம்?" அவன் தன்னைக் காதலிக்கிறான் என்பதையே ஜீரணித்துக்கொள்ள முடியாத நிலையில் அடுத்து கௌதம் பெயரை உச்சரித்ததும் படபடப்பு அதிகமானது.

"ஜனனி... நான் உங்களிடம் என் மனதை தெரியப்படுத்தாமல் இருந்ததற்கு பலனை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். கௌதமும் உங்களை நேசிக்கிறான் என்றறிந்தபோது துடித்துப் போய்விட்டேன். அவன் உங்கள் பின்னே, பஸ் ஸ்டாண்ட் என்றுகூட பார்க்காமல் இன்டீசன்ட்டாய் சுற்றியதிலிருந்தே நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவன் நல்லவன் அல்ல! பொறுப்பற்றவன். அனாதை! அப்பா யாரென்றே தெரியாத அனாதை. அப்படியானால் எப்பேர்ப்பட்ட குடும்பம் பாருங்கள். ஊர் சுற்றி! அப்படிப்பட்டவனின் நிழல்கூட உங்கள் மீது படக்கூடாது என்றுதான்... இந்த அலுவலகத்தில் நீங்கள் வருவதை விரும்பாமல் சொல்லாமல் மறைத்தேன். ஆனால் உங்களுக்காக எத்தனை இடங்களில் வேலைக்கு சொல்லி வைத்திருக்கிறேன் தெரியுமா? அதைப் புரிந்துகொள்ளாமல்...!" வேதனையுடன் பேசினான்.

ஜனனிக்கு குழப்பமாய் இருந்தது. உள்ளிருந்து ஒரு குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. முகேஷை நம்பாதே என்று.

இவனுக்கும், கௌதமுக்கும் எத்தனை வித்தியாசம்! அவன் இவனை அறிமுகப்படுத்தியபோது நாகரிகமாய் உயர்வாய் சொன்னான். அவனாவது

ஆரம்பம் முதலே தன் காதல் முகத்தைதான் காட்டினான். ஆனால், இவன் நட்பு என்ற போர்வையில் எவ்வளவு காலம் பழகினான்? இவன் நடிக்கிறானா? அவன் நடிக்கிறானா? யாரைத்தான் நம்புவது?

பெருமூச்சுடன் எழுந்தாள்.

"ஜனனி.. ஒண்ணும் சொல்லாம கிளம்பினா எப்படி?"

"என்ன சொல்லணும்?"

"நான் உங்களை கல்யாணம்..."

"ப்ளீஸ் முகேஷ்! இதுவரைக்கும் உங்கள் மீது 'அப்படிப்பட்ட எண்ணம் எனக்கு ஏற்படட்டதில்லை. ஒருவேளை இனி ஏற்படலாம். என் குடும்ப சூழ்நிலையில் இதெல்லாம் எனக்கு தோன்ற வாய்ப்பில்லை. எனக்கு குடும்பம் முக்கியம். அதன்பிறகுதான் மற்றதெல்லாமே!"

"ஜனனி.. நான் உங்கள் குடும்ப பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் ஜனனி!"

அவன் அப்படி பேசியதே.. ஏனோ பிடிக்கவில்லை.

"இல்லை முகேஷ்.. நான் யோசிக்கணும். அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்க நான் விரும்பவில்லை. நான் வருகிறேன்..." ஜனனி போய்விட்டாள்.

சற்றே ஏமாற்றமாய் உணர்ந்தாலும் முகேஷிற்கு ஒரு ஆறுதல்! அவள் மனதில் கௌதம் நுழையவில்லை. அதுவரைக்கும் சந்தோஷம் என்று ஆறுதல்படுத்திக் கொண்டான்.

**கௌ**தம் அவளை கவனிக்காமலில்லை. ஜனனியின் முகம் வாட்டமாய் இருந்தது.

'ஏன்.. என்னாயிற்று? போய் கேட்கலாமா? இதுவரை அலுவலக சம்பந்தப்பட்ட விஷயங்களைத்தவிர வேறெதையும் பேசியதில்லை. இப்போது பேசினால், தவறாக நினைத்து விடுவாளோ? வேண்டாம். எதிலும் அவசரம் கூடாது.

தவிர, தலைக்குமேல் வேலை இருக்கிறது. அதையெல்லாம் முடித்தாக வேண்டும். கனடாவிலிருந்து எம்.டி. எப்போது வேண்டுமானாலும் வந்து நிற்பார் என்ற செய்தி வேறு அலுவலகப் பணியாளர்களை 'பிளேக்' நோய் பிடித்தாற்போல் ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறது.

ஜனனியை அழைத்தான்.

வந்து நின்றாள்.

சில முக்கியமான குறிப்புகளை கூறக்கூற எழுதிக் கொண்டாள்.

"இந்த டாக்குமெண்டை உடனடியாக முடித்தாக வேண்டும் ஜனனி. லன்ச் அவருக்குள் முடித்துவிட முடியுமா?" தயவாய் கேட்டான்.

இவனா? இவனையா கெட்டவன் என்கிறான் முகேஷ்? இவனா பொறுப்பில்லாதவன்?

கௌதம்.. நல்ல நிறத்துடன், நல்ல உடற்கட்டுடன் இருந்தான். கருமையான கேசம். கூரிய மூக்கு. பெரிய கண்கள். அடர்ந்த மீசை மேலுதட்டை மறைத்துக்கொண்டு. சிரிக்கும்போது விரியும் சதைப்பிடிப்பான ரோஸ்நிற உதடு இதுவரை சிகரெட்டையே தொட்டதில்லை என்று சத்தியம்செய்தன.



மொத்தத்தில் முகேஷைவிட நல்ல பர்ஸனாலிட்டியாக இருந்தான்.

'சே.. இதென்ன? இவனை அணுஅணுவாக ரசிக்கிறேனே! எப்போது புகுந்தது என்னுள் இப்படியொரு கள்ளத்தனம்? நான் இவனை காதலிக்கிறேனா?

இல்லை.. இருக்க முடியாது! எனக்கு குடும்ப பொறுப்பு முக்கியம். அட்லீஸ்ட் புனிதா படிப்பு முடியுமட்டுமாவது என் மனதிற்கு கடிவாளம் தேவை!

"ஜனனி.. மிஸ் ஜனனி!"

"அ.. எஸ்.. ஸார்!"

"பலமுறை கூப்பிட்டுவிட்டேன். கவனம் சிதறிவிட்டதா? உடம்பிற்கு சுகமில்லையா?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை ஸார்!"

"நல்லது. நான் சொன்னதெல்லாம் புரிந்ததா?"

"ம்.. இன்னும் ஒரு மணி நேரத்தில் இந்த டாகுமெண்டை முடித்து விடுகிறேன்."

"அவ்வளவுதானா? மற்ற விஷயங்கள் உங்கள் கவனத்தை கவரவில்லை என்றே நினைக்கிறேன்" சொல்லிவிட்டு சிரித்தான்.

ஜனனி தலை கவிழ்ந்துக் கொண்டாள்.

"ஜனனி.. நாளைக்கு நான் ஆபீஸுக்கு வரமாட்டேன்!"

"ஏன்?"

"என் அம்மாவிற்கு திதி! நாளைக்கொரு நாள் என் வேலைகளையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ளுங்கள்."

"கண்டிப்பாக! கேட்கிறேன் என்று தப்பாக எண்ண வேண்டாம். அம்மா எப்படி இறந்தார்கள்?" ஜனனி அப்படியொரு கேள்வியை கேட்பாள் என அவன் எதிர்பார்க்கவில்லை. அப்படிக் கேட்டது என்னவோ கௌதமிற்கு சந்தோஷமாகவே இருந்தது.

"தெரியாது. நான் பிறந்ததும் இறந்து விட்டதாக சொன்னார்கள். கடவுளின் முகத்தை நேரில் யாரும் பார்த்ததில்லை. அதேபோல்தான்! என் தாய்தான் எனக்கு தெய்வம். அவர்களைதான் நான் வணங்கி வருகிறேன். இதோ.. இவள்தான் என் அம்மா!"

தன் பெட்டியைத் திறந்து திலகவதியின் போட்டோவை எடுத்து அவளிடம் காட்டினான்.

அதைப் பார்த்து பிரம்மித்துப் போனாள்.

பெற்ற தாயை தெய்வமாக வணங்கிவந்த இவன் நிச்சயம் கெட்டவனாக இருக்கவே முடியாது. அவள் மதிப்பில் கௌதம் இன்னும் உயர்ந்தான்.

மேற்கொண்டு வம்பளக்காமல் பணியில் ஈடுபட்டாலும், ஜனனியின் மனம் தாவித்தாவி அவன் டேபிளுக்குத்தான் ஓடிக்கொண்டிருந்தது.

**தொ**டர்ந்தாற்போல் ஒருவாரம் கௌதம் அலுவலகத்திற்கு வரவில்லை. காய்ச்சல் என்று சொன்னார்கள்.

தவித்துப் போனாள் ஜனனி! அவனில்லாத அந்த அறை சுடுகாடு போல் இருந்தது.

இது புதுவிதமான தவிப்பு! இப்படியொரு அவஸ்தையான உணர்வு அவனுக்கு இதுவரை ஏற்பட்டதேயில்லை. சாப்பாடு இறங்கவில்லை. ஆபீஸிற்கு கொண்டு வரும் டிபன்பாக்ஸை திறக்காமலே வீட்டிற்கு எடுத்துச் சென்றாள்.

"அநாதை என்றார்களே! அருகிலிருந்து யார் கவனித்துக் கொள்வார்கள்? அவசரத்திற்கு ஒரு வெந்நீர் வைத்துக்கொடுக்க யார் இருப்பார்கள்? அவன் வீட்டிற்கு சென்று பார்த்தால் என்ன?"

அதற்குமேல் அங்கிருக்கப் பிடிக்காமல் அரைநாள் லீவு போட்டு விட்டுக் கிளம்பினாள்.

ஒதுக்குப்புறமான ஏரியாவில், தனியான வீடு! ஆபத்து அவசரத்திற்கு குரல் கொடுத்துக்கூட வரவழைக்க முடியாத அளவிற்கு இங்கொன்றும், அங்கொன்றுமாக வீடுகள்.

காலிங்பெல் அழுத்தினாள்.

"தாழ் போடவில்லை. கதவை திறந்துக்கிட்டு வாங்க!" என்று கௌதம் குரல் கொடுத்தான்.

திறந்து உள்ளே நுழைந்த ஜனனியை அவன் எதிர்பார்க்கவில்லை.

கட்டிலில் வெற்று மார்புடன் படுத்திருந்த கௌதம் அரக்கப் பரக்க எழுந்து டவலால் போர்த்திக் கொண்டான்.

"வாட் எ சர்ப்ரைஸ்! வாங்க... வாங்க ஜனனி!" சிலிர்த்துப் போனான்.

"நல்லா இருக்கீங்களா ஸார்?"

"கால் மீ கௌதம்! இது ஆபீஸ் அல்ல ஜனனி!"

சிரித்தான் அவன்.

காய்ச்சலில் இளைத்து முகம் வாடிப் போயிருந்தான். மிகச் சிறிய வீடு! ஒரு ஹால்! அங்கேயே கட்டில் போட்டு பெட்ரூம் ஆக்கியிருந்தான். ஒரு சமையலறை, பாத்ரூம் மற்றும் ஒரு சிறிய அறை! ஹாலிலேயே என்லார்ஜ் செய்து மாட்டியிருந்த அவன் தாயின் போட்டோவிற்கு சந்தன மாலை போடப்பட்டு அணையா விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க! இதுதான் என் மாளிகை!"

"உங்கள் ஒருவருக்கு இது போதும்!" என்றவள் மீண்டும் அவன் தாயின் போட்டோவில் கண் பதித்தாள். ஏதோ வித்தியாசம் உணர்ந்தவளாய் முகம் சுருக்கினாள்.

"என்ன ஜனனி அப்படிப் பார்க்கறீங்க? அது போட்டோ அல்ல... ஓவியம்!"

"என்ன... நிஜமாவா?" ஆச்சரியமாய் அருகே சென்று ஊன்றி கவனித்தாள்.

நிஜம்தான். ஓவியம்தான் அது! எவ்வளவு தத்ரூபமாய் இருக்கிறது.

"இதை யார் வரைந்தது?"

"அதிலேயே பெயர் இருக்கும் பாருங்கள்."

பார்த்தவள் இன்னும் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"கௌதம்... நீங்களா?"

"நான்தான்! ஏதோ ஓரளவு வரைவேன்!"



"இது ஓரளவா? வஞ்சப்புகழ்ச்சியாக்கும்!" என்று பெருமையாய் கிண்டல் செய்தாள்.

"எப்படி... நிறைய வரைவீர்களா?"

"ம்ஹூம்... ஒருமுறை பார்த்தால்கூட போதும். ஆனால், மனதில் அந்த முகம் அழுத்தமாய் பதிந்தால்... நேரில் மறுமுறை பார்க்காமலேயே வரைவேன். இது போட்டோவைப் பார்த்து வரைந்தது!"

"பார்க்காமல் வேறென்ன வரைந்தீர்கள்?"

"ஒரே ஒரு படம் மட்டும்தான்!"

"பார்க்கலாமா?"

உடனே சரியென கூறாமல் தயங்கினான்.

"ஏன் நான் பார்க்கக் கூடாதா?"

"பார்க்கலாம். ஆனால், பார்த்தபின் கோபப்பட மாட்டேன் என்று சத்தியம் செய்யுங்கள்... அதன்பிறகு காட்டுகிறேன்."

"ஏன்?" புருவம் முடிச்சிட்டது.

"முதலில் சத்தியம்!"

"சரி... கோபப்படமாட்டேன்! காட்டுங்கள்" ஆர்வமாய் கேட்டாள்.

கௌதம் தயங்கினான்.

"நீங்கள் புறப்படும்போது காட்டுகிறேன். ஓகே! அதற்குமுன் என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"அரிசி கஞ்சி, அல்லது பார்லி கஞ்சி!"

"என்ன?"

பின்னே? காய்ச்சலில் கிடந்தவரை பார்க்க வந்தால் என்ன கிடைக்கும்? அதெல்லாம் ஏதுவும் வேண்டாம். ஆமாம். உங்கள் உதவிக்கு ஆள் யாருமில்லையா?"

காலையில் ஒரு வயசான அம்மா வருவாங்க. சமைத்து, துவைத்து, பெருக்கிவிட்டு போயிடுவாங்க! இரவு சமையல் நானே பண்ணிப்பேன். அட்லீஸ்ட் காபியாவது சாப்பிடுங்க ஜனனி! ப்ளீஸ்..." என்றபடி பிளாஸ்கில் இருந்து ஊற்றிக் கொடுத்தான்.

மறுக்காமல் வாங்கிக் கொண்டவள், அலுவலக சம்பந்தமாய் பேசினாள்.

"எப்போது ஆபீஸ்க்கு வருகிறீர்கள்?"

"நாளைக்கே..."

"ஏன்... இன்னும் ரெண்டுநாள் ரெஸ்ட் எடுத்துக்கலாமே!"

"நோ... நோ... வெறும் டயர்ட் மட்டும்தான் இருக்கு பாவம். என் வேலையும் சேர்த்து நீங்களும் எத்தனை நாள்தான் செய்வீர்கள்!"

"சரி... நேரமாச்சு... புறப்படட்டுமா?"

"இவ்வளவு தூரம் என்னைத் தேடிவந்து நலம் விசாரித்ததற்கு ரொம்ப தாங்க்ஸ்..."

"சரி. தாங்க்ஸ் சொல்லி அனுப்பிட்டா மறந்துடுவேன்னு நினைச்சீங்களா? அந்த ஓவியத்தை முதல்ல காட்டுங்க."

"ப்பா.. இன்னும் மறக்கலையா நீங்க?"

"மறக்கறதா? இத்தனவு தயங்கற அளவுக்கு அதுலே அப்படி என்னதான் இருக்கு?"

கௌதம் மெல்ல எழுந்து அந்த சிறிய அறைக்கு அழைத்துச் சென்றான். ஒரு டேபிள் மீது வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டு இருந்த அந்த ஓவியத்தின் அருகே அழைத்து வந்தான்.

"இதுவா?"

"ம்!"

ஜனனி தானே அந்த துணியை விலக்கியவள் மூச்சுவிட மறந்தாள்.

ஜனனியின் பிரதி அங்கிருந்தது.

## 7

புற்களை பிடுங்கிப் பிடுங்கிப் போட்டுக் கொண்டிருந்தாள் ஜனனி! அவளுக்கு சற்று கூடுதலான இடைவெளி விட்டு கௌதம் அமர்ந்திருந் தான்.

அன்று அவனை ஓவியமாய் பார்த்தவள்.... அப்படியே அதிர்ந்து ஒன்றுமே சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு வந்து விட்டாள்.

அந்த செய்கையே கௌதமை பாடாய்படுத்தி, கொல்லாமல் கொன்றது.

மறுநாள் அவள் முகத்தைப் பார்க்கக்கூட பயமாய் இருந்தது.

ஜனனியே அவனிடம் தனியாக பேச வேண்டும் என்று அழைத்த போது இன்னும் பயந்து போனான். வந்து அரைமணி நேரமாயிற்று. இதுவரை ஒரு வார்த்தைக்கூட அவள் பேசவில்லை.

"ம்க்கும்..." என்று கனைத்த ஜனனி அவனைப் பார்த்தாள்.

"நான் எதிர்பார்க்கவில்லை கௌதம்! அந்த ஓவியம் நானாக இருப்பேன் என்று கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. ஏன், எப்படி வரைந்தீர்கள்?"

"நான் அதை காட்டியிருக்கக் கூடாது!"

"காட்டாமல்? எதற்காக வரைந்தீர்கள்?"

"அது-- வந்து!"

"சொல்லுங்கள்!"

"இதுவரை என் தாயின் முகம் தவிர, வேறு எந்தப் பெண்ணின் முகமும் என்னைக் கவர்ந்ததில்லை. அந்த அன்பான, அனுசரணையான முகம் உங்களிடம் இருந்தது. பார்த்த முதல் பார்வையிலேயே உங்கள் முகம் என்னுள் பதிந்து விட்டது. அப்போதே.. நீங்கள் இந்த ஆபீசில் வருமுன்பே அதை வரைந்து விட்டேன்!"

"அதை ஏன் மறைத்து வைத்தீர்கள்?"

"யார் கண்ணிலும் படக்கூடாது என்றுதான்! ஜனனி நான் ஒரு உண்மையை சொல்லட்டுமா? நான் உங்களை நேசிக்கிறேன். ஆமாம்! என் உயிரை விடவும் மேலாக நேசிக்கிறேன். எட்ட இருந்தாவது உங்களைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிற தவிப்பு! வெளிப்படுத்தவும் பயம். பதிலுக்கு 'உன்னை எனக்கு பிடிக்கவில்லை'



என்று கூறிவிட்டால்.. என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது அதனால்தான்.. நான் எல்லாவற்றையும், மறைத்தேன்.." கௌதம் தயங்கித் தயங்கி சொன்னான்.

"இது தவறென்று படவில்லையா கௌதம்!"

"தவறா?"

"ஆமாம்.. காதலை மனசுக்குள்ளேயே பூட்டி வைத்தால் யாருக்கு லாபம்? இது தவறில்லையா? இதையெல்லாம் உடனே சொல்லிவிட வேண்டாமா?"

"ஜ..ன..னி!" கண்கள் விரிய அவளைப் பார்த்தான்.

"அப்ப...."

"என்ன பண்றது? நானும்தான் உங்களை லவ் பண்றேன். வேற வழி?"

"ஜனனி..." அருகில் வந்தான்.

"நிஜமாவா?"

"ம்...."

"மைகாட்!" இன்ப அதிர்ச்சியில் கையை நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டான்.

"ரொம்ப அழுத்தாதீங்க கௌதம்."

"ஏன்?"

"எனக்கு வலிக்குது! அங்கே நான்தானே இருக்கிறேன்."

ஜனனி காதலாய் அவனைப் பார்த்தாள். கௌதம் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டே கண்கள் மின்ன அவளைப் பார்த்தான்.

"ஜனனி.. எனக்கு இந்த உலகத்திலே ரெண்டே ரெண்டு ஆசை!"

"என்ன அது?"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும். அடுத்து பெரிய பணக்காரனாகணும்."

"முதலாவது சரி! ரெண்டாவது ஆசை.. பேராசையாக அல்லவா தெரிகிறது?"

"வாழ்க்கையில் லட்சியம் இருக்கணும் ஜனனி. நானும் ஒரு பெரிய கம்பெனிக்கு முதலாளியா இருக்கணும். பல பேருக்கு வேலை கொடுக்கணும். இது என் நெடுநாளைய ஆசை ஜனனி" கண்கள் பளபளக்க சொன்னான்.

ஜனனி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் அதிகமாக எதற்குமே ஆசைப்பட்டதில்லை ஜனனி. ஒருவேளை சொந்த பந்தம் எதுவுமில்லாம அனாதையா மாமா வீட்லே வளர்ந்ததாலேயோ, என்னவோ தெரியலை. பசிச்சாக்கூட கேட்டு வாங்கி சாப்பிட கூச்சம். நல்ல டிரெஸ், அது இதுன்னு போட்டுப் பார்க்கணும். அனுபவிக்கணும்னு ஆசை எழும்போதெல்லாம் நான் ஒரு அனாதைங்கற உணர்வு தலைதூக்கும். ஆசை அழிந்து போகும். இப்படியே எனக்கு நானே அடக்கி, அடக்கி ஆசைங்கிற வார்த்தையே மறந்து போச்சு

எனக்குன்னு அம்மா, அப்பா இருந்திருந்தா, பிள்ளைக்கு பிடிக்குமேன்னு விதவிதமா சமைச்சுப் போட்டிருப்பா. அப்பா நான் கேட்டதெல்லாம் வாங்கித் தந்திருப்பார். ஆனா என் வாழ்க்கையிலே இது எதுவுமே நடக்கலை. நான் இழந்தவை மிக அதிகம். இன்னொரு உண்மை உனக்கு தெரியணும் ஜனனி!"

எனக்கு அம்மாவை மட்டும்தான் தெரியும். அப்பாவைத் தெரியாது. அம்மா யாரையோ காதலிச்சி ஏமாந்துப் போயிட்டதா மாமா சொல்வார். ஆனா, அம்மா ரொம்ப நல்லவ ஜனனி. போட்டோவை பார்த்தேயில்லே! எங்கம்மா தப்பானவயில்லே! அம்மாதான் எனக்கு தெய்வம். அந்த முகம், ஒளி வீசுற கண்கள், மூடியிருந்தாலும் சிரிக்கிற உதடுகள்... அந்த தெய்வீகமான முகம்... அந்த மாதிரி என் மனசை கவர்ந்த ஆசை முகம் உன்னோடது மட்டும்தான் ஜனனி! எனக்கு கிடைக்காத தாயன்பு உன் மூலமா எனக்குக் கிடைக்கணும்... கிடைக்குமா ஜனனி?" கௌதம் குரல் தழுதழுப்பாய் வெளிப்பட்டது.

ஜனனி அவன் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டாள்.

"நிச்சயமா... கௌதம்! காம் டவுன்... ப்ளீஸ்...!"

சற்று நேர அமைதிக்குப் பிறகு மறுபடி ஆரம்பித்தான்.

"நான் அனுபவிக்காத அன்பு, பணம், வாழ்க்கை வசதிகள் அத்தனையையும் குறைவில்லாம என் குழந்தைகள் அனுபவிக்கணும்."

"நம்ம குழந்தைகள்னு சொல்லுங்க!"

"ஸாரி... நம்ம குழந்தைகள் அனுபவிக்கணும். அநாதை பிள்ளைகளுக்கு எல்லா வசதிகளோடு ஒரு ஆர்ப்பனேஜ் கட்டணும். அதுக்கு நிறைய பணம் சேர்க்கணும். பாங்கில லோன் அப்ளை பண்ணப் போறேன். அதை வச்சு சின்னதா ஒரு தொழில் ஆரம்பிக்கணும். படிப்படியா முன்னேறணும். நீ கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்கெல்லாம் போகக் கூடாது. இனி உன் குடும்பப் பொறுப்பு முழுக்க என்னோடதுதான். பாங்கில என் சேமிப்பு பணம் ஓரளவு இருக்கு. அதை வச்சு முதல்ல புனிதாவோட கல்யாணத்தை முடிக்கணும். அப்புறம்..."

அவன் சொல்லிக்கொண்டே போக ஜனனி அவனையே பிரமிப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் நெஞ்சில் காதல் பொங்கியது. கௌதம் அவள் மீது வைத்திருக்கும் அன்பை எண்ணி ஓவென்று அவன் மடியில் சாய்ந்து அழ வேண்டும் போலிருந்தது.

மெல்ல அவன் தோள்மீது சாய்ந்துக் கொண்டாள். இதை எதிர்பார்க்காத கௌதம் பேச்சை நிறுத்தி அவளை மென்மையாய் இழுத்து கழுத்தில் முகம் பதித்தான்.

"ஜனனி..."

"ம்..."

"உன்னை முதமுதலா பார்த்தப்பவே... 'இவதான்டா உனக்குன்னு' ஒரு குரல் எனக்குள்ளிருந்து வெளிப்பட்டது தெரியுமா?"

"நிஜமாவா?"

"ம்... அதேபோல என்னை நீ முதமுதலா பார்த்தப்ப உன் மனசுல என்ன நினைச்சே?"



"வேணாம் கௌதம்... தெரிஞ்சா சங்கடப்படுவீங்க!"

"சங்கடப்படுற அளவுக்கு என்னடி நினைச்சு தொலைச்சே?"

"சரியான பொம்பளை பொறுக்கின்னு..." சிரித்தபடி சொன்னாள்.

"அடிப்பாவி!" என்று அவள் இடுப்பில் கிள்ளினான்.

"ஆ"வென்று அலறியபடி துள்ளினாள் ஜனனி.

**கௌ**தம், ஜனனியின் காதல் கிடுகிடுவென வளர்ந்து கொண்டிருந்தது. இவளை அடித்தால் அவனுக்கு வலித்தது. அவனுக்கு வலித்தால் இவளுக்கு கண்ணீர் வந்தது. அப்படி ஒருவருக்குள் ஒருவர் ஆத்மார்த்தமாக ஐக்கியமாகியிருந்தனர்.

முகேஷ் இவர்கள் காதலைப் பார்த்து மரவட்டையாய் சுருண்டு போயிருந்தான். இருவரிடமும் சரிவர முகம் கொடுத்து பேசவில்லை. கௌதம் வலிய சென்று பேசினாலும் விலகிப் போனான். அந்த செய்கை கௌதமை சங்கடப்படுத்தியது.

ஜனனி சந்தோஷமாயிருந்தாள். தான் எதிர்பார்த்ததையும்விட எல்லாவற்றிலும் சிறந்த ஒருவனே தன் கணவனாக வரப் போகிறான் என்று மகிழ்ந்தாள். அந்த சந்தோஷம் வீட்டை பளிச்சிட வைத்தது. கை நிறைய சம்பளம் என்றதால்... வீடு எப்போதும் சிரிப்பில் கலகலத்தது.

ஒருநாள் கபாலீஸ்வரர் கோவிலுக்கு சென்றிருந்தாள் ஜனனி. மனம் நிறைய கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு வெளியில் காலார நடந்துக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் பார்த்தாள். எதிர் ரோடில் ஒரு இளம் வாலிபனின் இடுப்பை சேர்த்தணைத்த படி பைக்கில் பறந்து கொண்டிருந்தாள் புனிதா!

ஜனனிக்கு காலுக்கு கீழே பூமி அதிர்ந்தது.

## 8

**பு**லி வரப்போகுது, புலி வரப்போகுது என்று பயங்காட்டிக்கொண்டிருந்த நேரத்தில் நிஜமாகவே புலி வந்துவிட்டது. அதுவும் குடும்பத்தோடு!

வேறொன்றுமில்லை! கனடாவிலிருந்து கம்பெனியின் எம்.டி சங்கரன், தன் மனைவி மகனோடு இந்தியாவிற்கு திரும்பி விட்டிருந்தார்.

சங்கரன் பெங்களூரிலிருந்த கிளை அலுவலகத்தின் பொறுப்பையும், மகன் நித்திலன் சென்னை அலுவலகத்தின் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதாக முடிவு செய்து சங்கரன் மனைவியோடு பெங்களூரில் போய் தங்கி விட்டார். நித்திலன் சென்னை அண்ணாநகரிலிருந்த பங்களாவில் தங்கினான்.

பங்களா என்றுகூட சொல்லக்கூடாது. மாளிகை என்பதுதான் சரி. மிக நவீனமாய் கட்டப்பட்டிருந்தது. சுற்றிலும் நந்தவனமாய் வண்ண வண்ண மலர்ச்செடிகள் அரணமைக்க... நட்ட நடுநாயகமாய் வீற்றிருந்தது வெள்ளை நிற பளிங்குக்கல் மாளிகை.

நாலைந்து நாய்கள், வகைக்கொரு கார்கள், ஸ்விம்மிங் பூல், டென்னிஸ் கோர்ட் என்று ஆடம்பரமாய் இருந்தது நித்திலனை

கவனித்துக்கொள்ள பத்து வேலைக்காரர்கள்.

சங்கரன் இந்தியாவிற்கு வந்து செட்டிலாக நித்திலன்தான் முழுமுதற் காரணம்.

இருபத்திநாலு முடிந்து, இருபத்தி ஐந்து வயதில் அடியெடுத்து வைத்திருக்க மகனுக்கு உடனே திருமணத்தை முடித்துவிட நினைத்தார் சங்கரன். அதன் விளைவாக கனடாவில் பரவலாக வாழ்ந்து வந்த தமிழக குடும்பங்களில் பெண் தேடினார். அதில் சல்லடையாய் சலித்து நான்கு பெண்களை தேர்ந்தெடுத்து வந்து மகனிடம் பிடித்ததை தேர்ந்தெடு என்றார்.

ஆனால், நித்திலனுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. அவன் கனடாவிலேயே பிறந்து வளர்ந்திருந்தாலும், அதி நாகரிகமாய் பவனி வரும் பெண்களை ஏனோ பிடிக்கவில்லை. ஷாம்பூவில் அலசி, கூந்தலை பேய் மாதிரி விரித்துப் போட்டுக்கொண்டு போகும் பெண்களை பார்க்கும் போதெல்லாம் முடியை கொத்தாக பிடித்து உலுக்க வேண்டும்போல் ஆவேசம் எழும்.

அம்மா கஸ்தூரியும் மகனுக்கு தோதாய் களத்தில் இறங்க வேறு வழி யின்றிதான் சங்கரன் இந்தியா வந்ததே!

நித்திலன் அலுப்பு தீர ரெஸ்ட் எடுத்துக் கொண்டபின் அன்றுதான் முதன் முதலாக அலுவலகம் சென்றான்.

எம்.டியின் வருகைக்காக அலுவலகம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அலுவலக ஊழியர்கள் அவன் காரை விட்டிறங்கியதும் கைதட்டி வரவேற்றனர். ஜலேந்திரனும், கௌதமும் மாலை போட்டு கை குலுக்கினர்.

புன்னகையுடன் அவர்களோடு உள்ளே நுழைந்த நித்திலனுக்கு அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தனர்.

"இவர் முகேஷ்... சேல்ஸ் எக்ஸிகியூடிவ்!"

"ஹலோ"

"இவங்க மிஸ். மதுபாலா. டெலிபோன் ஆபரேட்டர்"

"ஹலோ"

"இவங்க மிஸ். ஷ்யாமளா. உங்களுக்காக புதிதாக அப்பாயிண்ட்மெண்ட் செய்யப்பட்ட பி.ஏ."

"ஹலோ!"

"இவங்க... மிஸ். ஜனனி! மேனேஜர் கௌதமோட அசிஸ்டெண்ட்!"

'ஹலோ' என்று சொன்னான். ஆனால் பேச்சு வரவில்லை. அவளைப் பார்த்து திகைத்துப் போனான். நித்திலனுக்குள் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்ததை அவனால் உணர முடிந்தது.

எம்.டி. தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது ஜனனிக்கு சங்கடத்தை தர, கூப்பிய கரங்களோடு, தலையை தாழ்த்திக் கொண்டாள்.

சட்டென்று சுதாரித்துக்கொண்ட நித்திலன் 'மெலிதாய் ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு தன்னறைக்குப் போனான்.

அதன்பிறகு பைல்களை கொண்டு வந்து அவனிடம் ஒவ்வொன்றாய் விளக்கி சொல்லிக் கொண்டிருந்த ஜலேந்திரனின் பேச்சு எதுவுமே காதில் விழவில்லை.



யார் அவள்? எவ்வளவு அழகான பெண்!

ஜனனி...! உச்சரிக்கும்போதே ஜலதரங்கம் வாசிப்பது போல் இருக்கிறதே! ஜனனி! நான் தேடிய பெண் நீதான்!

அன்றிரவு நித்திலனுக்கு உறக்கமே வரவில்லை! கண்ணை மூடினாலும், இமை மீது ஜனனி வந்து நின்றாள்.

அந்த அலுவலகத்தில் அவள் தவிர இன்னும் ஆறு இளம் பெண்களும் பணிபுரிந்தனர். அத்தனைப் பேரும் அழகுதான்! ஜனனியை விடவும் அழகான பெண்களும் இருந்தனர். ஆனால், 'தனக்கு மனைவியாக வரப் போகிறவள் இப்படி இப்படி இருக்க வேண்டும்' என்று மனதிற்குள் வரைந்து வைத்திருந்த பெண்... உயிர்ப்பெற்று வந்ததுபோல் ஜனனி இருந்ததுதான் ஆச்சரியம்.

அவள் யார்? என்ன, ஏது? எதுவும் தெரியாது எனினும் நித்திலன் முடிவு செய்து விட்டான். ஜனனிதான் என் மனைவி! கார்ட்லெஸ் போன் அலறியது! நித்திலன் அதை எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

"ஹலோ..."

"ஹாய் மை சன்!" சங்கரன் குரல் பாசமாய் ஒலித்தது

"ஹலோ... டாட்!" எப்படியிருக்கீங்க?"

"நீ எப்படியிருக்கே? அதைச்சொல் முதலில்"

"ஃபைன் டாடி!"

"சென்னை பிடிச்சிருக்கா? பிடிக்கலேன்னா பெங்களூர் வந்துடு! இங்கே வெதர் நல்லாருக்கு!"

"நோ... நோ! எனக்கு இங்கே ரொம்ப பிடிச்சிருக்கு ஐ- லவ். சென்னை!"

"என்னடாப்பா ஆச்சர்யமாயிருக்கு! உனக்கு வெயில் ஆகாதே! அங்கே உன்னை ஃப்ரை பண்ணிடும்."

"ம்ஹூம்! இங்கே ஒரு கவிட்சர்லாந்தே இருக்கு டாடி! நான் இதை விட்டு வரவே போவதில்லை!"

"மகனே! இவ்வளவு சீக்கிரம் அந்த ஊர்மேல உனக்கு அபிமானம் வந்துருக்குன்னா ஆச்சர்யமாக்கூட இல்லே. சந்தேகமா இருக்கு. சொல்லு நித்தி... நான் வேற பெங்களூர்ல அலையன்ஸ் பார்க்க ஆரம்பிச்சிட்டேன். அதுல ரெண்டு நிச்சயமா உன் டேஸ்ட்டுக்கு ஒத்துவரும். அதெல்லாம் வேஸ்டாகிடக் கூடாதில்லையா?"

"வேணாம் டாடி! உங்க டைமை வேஸ்ட் பண்ணாதீங்க!"

"அப்படீன்னா..."

"ஆமாம்ப்பா!"

"ம். பரவாயில்லையே! யாருப்பா அந்த அதிர்ஷ்டசாலி? பேரென்ன? நம்ம அந்தஸ்துக்கு ஒத்து வருவாளா?"

"விளக்கமா அப்புறமா சொல்றேன். இப்ப எதையும் கேக்காதீங்க! ஆனா டாடி! ஒண்ணு மட்டும் நிச்சயம். அவதான் என் மனைவி! அந்தஸ்து, ஜாதி ஒத்து வரலேன்னாக்கூட...!"

"நி... த்... தி!" சங்கரன் அதிர்வது துல்லியமாய் தெரிந்தது.

சங்கரன் சரிவர சாப்பிடாமலேயே கையை கழுவிவிட்டார். கஸ்தூரி அவரை கவலையோடு பார்த்தாள்.

"என்னங்க இது? சரியாவே சாப்பிடாம..."

"மனசு ஃப்ரீயா இருந்தா... வயிறும் ஃப்ரீயா இருக்கும். பசிக்கும். எனக்குதான் மனசு ரொம்பிக் கிடக்கே கஸ்தூரி!"

"பாருங்க! நித்தி நமக்கு ஒரே பிள்ளை! நமக்கு என்ன குறை? போதும் போதும்ங்கற அளவுக்கு மீறியே பணம் கொட்டிக் கிடக்கு! இதுல மருமகளா வரப்போறவ வேற கொண்டு வரணும்னு எதிர்பார்க்கிறது..."

"புரியாம பேசாதே! பணம் என்னோட குறிக்கோள் இல்லை. கௌரவம்! அதைத்தான் எதிர்பார்க்கிறேன். என்கூட சம்பந்தம் பண்ற அளவுக்கு இந்தியாவுல ஏழெட்டு பேருக்குத்தான் தகுதி இருக்கு. அப்படி யில்லாம ஒரு சாதாரண அன்னக்காவடிய எல்லாம் என் சம்பந்தியாக்கிக்க சொல்றியா?"

"புரியுதுங்க! ஆனா, நம்ம நித்தியோட குணம் உங்களுக்குத் தெரியும். அவன் நினைச்சா... உடனே கிடைச்சாகணும். அப்படி ஒரு பிடிவாதம். கல்யாண விஷயத்துல அவன் பிடிவாதம் இன்னும் அதிகமாகத்தான் இருக்கும். நமக்கு அவன் ஒரே பிள்ளை! அதை அடிக்கடி ஞாபகப் படுத்திக்குங்க. நீங்களும் பிடிவாதம் பிடிச்சி... அவன் ஏடாகூடமா... வேணாங்க. என்னால கற்பனையாக்கூட அதையெல்லாம் நினைச்சிப் பார்க்க முடியலே..."

சங்கரன் நெற்றி சுருங்க மனைவி சொல்வதை கேட்டுக் கொண்டிருந் தார்.

சினிமாவில் வரும் பணக்கார அப்பா வேஷத்துக்கு இவரைப் பார்த்து தான் ஒப்பனை செய்திருப்பார்கள்போல. அப்படியொரு டாம்பீகம். கம்பீரம்.

கஸ்தூரி எளிமையாய் இருந்தாலும் பணக்காரர்களுக்கே உரிய களை அந்த குடும்பப்பாங்கான, கனிவாக முகத்தில் கொட்டிக் கிடந்தது.

அப்படியொன்றும் சங்கரன் பிறக்கும்போதே கட்டுக்கட்டாய் கரன்சி களோடு பிறந்து விடவில்லை. உழைத்து முன்னேறியவர்தான். அவர் திறமையைப் பார்த்து பெரும் பணக்காரரான சோமசுந்தரம் தன் மகள் கஸ்தூரியை அவருக்கு கட்டி வைத்தார்.

"சார்..."

சங்கரனின் செக்ரெட்டரி அவர் எதிரில் பவ்யமாய் நின்றிருந்தார்.

"ம்..."

"சார்... மேனேஜர் உங்களைப் பார்க்க வந்திருக்கார்!"

"வரச்சொல்..."

மேனேஜர் பவித்ரன் வந்தார்.

"குட்மார்னிங் சார்!"

"ம்.. ம்.. என்ன விஷயம்?"

"சார்.. ஒரு பங்களா விலைக்கு வருதுன்னு சொன்னேனே! அது விஷயமா... அந்த ஓனர் உடனே நம்மளை வந்து பார்க்கச் சொல்றாங்க!



நிறைய பேர் டிமாண்ட் பண்றாங்களாம்! நான் போய் பார்த்துவிட்டு வரட்டுமா சார்?"

சற்று நேரம் யோசித்த சங்கரன் எழுந்தார்.

"வேண்டாம்! நானே வர்றேன்..." என்று புறப்பட்டார்.

நகரின் மையப்பகுதியில் மிக நவீனமாய் கட்டப்பட்டிருந்த அந்த பங்களா வெகு அழகாக இருந்தது.

பங்களா சொந்தக்காரர் சங்கரன் வயதுதான் இருந்தார். சங்கரனை அன்புடன் வரவேற்றார்.

"வெல்கம்... மிஸ்டர் சங்கரன்! ஐம் கிருஷ்ணன்..."

"ஹலோ..." என்று கையைப் பற்றி குலுக்கினார்.

பொதுவான விஷயங்கள் பேசினர்.

"இவ்வளவு அழகான பங்களாவை விற்க உங்களுக்கு எப்படி மனசு வருது மிஸ்டர் கிருஷ்ணன்?"

"மனசேயில்லாமதான் விற்கிறேன் சங்கரன். நான் கனடாவிலே இருந்தேன். அங்கேதான் பிஸினஸ் எல்லாம். சும்மா எப்பவாவது வந்து தங்கறதுக்காக இங்கே இதை வாங்கிப் போட்டோம். எங்களுக்கு ஒரே ஒரு பொண்ணு! போன மாசம் கனடாவிலே கல்யாணம் பண்ணிவிட்டு அங்கே போயிட்டா! செல்லமா வளர்த்த பொண்ணு! என் மனைவியால பிரிஞ்சிருக்க முடியல. அடிக்கடி போய் பார்த்துட்டு வர முடியுமா? அதான் மொத்தமா எல்லா சொத்துபத்தையும் வித்துட்டு கனடாவுக்கு போயிடறதா இருக்கோம்!"

"என்ன ஒரு வித்தியாசம் பார்த்தீங்களா! நான் என் பிள்ளைக்காக கனடாவிலேர்ந்து தாய்நாட்டுக்கு வந்தேன். நீங்க பொண்ணுக்காக தாய் நாட்லேர்ந்து கனடா போறீங்க. இந்த பாசம் இருக்கு பாருங்க... ரொம்பவே பாடா படுத்துது!"

"சரியா சொன்னீங்க சங்கரன்!" என்று ஆமோதித்தவர் தன் மனைவி வருவதைப் பார்த்து, "சுபத்ரா... இங்கே வாயேன்!" என்று அழைத்தார்.

அருகே வந்தாள்.

"இவர்தான் மிஸ்டர் சங்கரன்... நம்ம பங்களாவை வாங்கப் போறவர். இவதான் என் மனைவி சுபத்ரா!"

சுபத்ரா வணக்கம் சொல்லியபடி எதிரே அமர்ந்தாள். சங்கரனும் வணக்கம் சொன்னவர், முகம் சுருக்கினார்.

அவளை எங்கோ பார்த்ததுபோல இருந்தது.

சுபத்ராவுக்கும் அதே உணர்வுதான்.

சட்டென்று நினைவு வந்தவளாய்...

"நீங்க... நீங்க... சங்கர்தானே? திருச்சி மணப்பாறையில இருந்த அந்த சங்கர்தானே?" -

"ஆமாம்... நீங்க?"

"நான்தான் சுபி! திலகாவோட ஃப்ரண்ட்!"

அந்தப் பெயரைக் கேட்டதும் சிலிர்த்தது சங்கரனுக்கு.

"சு.. சுபத்ரா! எ.. எனக்கு என்ன சொல்றதுனே தெரியலே... இத்தனை

வருஷத்துக்குப் பிறகு உங்களை பார்ப்பேன்னு நான் எதிர்பார்க்கலே..." தழுதழுத்தார்.

"உலகம் ரொம்ப சின்னது சங்கர்! என்ன கிருஷ்? அசந்துப் போய் பார்க்கறீங்க? சங்கர் என்னோட காலேஜ்மேட்! என்னோட சீனியர் ஸ்டூடண்ட்! வெரி ப்ரில்லியண்ட் ஸ்டூடண்ட்! இவரோட திறமையைப் பார்த்து லண்டன்லேர்ந்து மேல் படிப்புக்கு அழைப்பு வந்தது. அப்போ... இது ரொம்ப பெரிய விஷயமா... எல்லா பத்திரிகையிலேயும் வந்தது!"

"அப்படியா?" என்று வாய் பிளந்தார் கிருஷ்ணன்.

"திலகா... திலகா எப்படி செத்துப்போனா சுபத்ரா?"

"உங்களுக்குத் தெரிய நியாயமில்லே சங்கர்! திலகா உங்கமேல உயிரையே வச்சிருந்தா! அதனாலதான் அவ ரொம்ப நம்பிக்கையோட தன்னையே உங்கக்கிட்டே கல்யாணம் ஆகுமுன்னாலே ஒப்படைச்சா இல்லையா?"

சங்கரன் தலைகுனிந்தார்.

"உங்களை அவ சந்தோஷமா ஃபாரினுக்கு அனுப்பி வச்சா. மூணு வருஷம்... மூணு மாசமா ஓடிப் போயிடும்னு தனக்குத்தானே சமாதானம் பண்ணிக்கிட்டா. ஆனா மூணு மாசம் ஆனப்பிறகுதான் அவளுக்கு வாழ்க்கையே ஓடிப்போச்சுன்னு புரிஞ்சுது. அவளைப் பெத்தவங்களுக்கு இந்த விஷயம் தெரிஞ்சப்ப... துடிச்சிப் போய்ட்டாங்க! மானம், மரியாதையோட வாழ்ந்த குடும்பத்தை சந்தி சிரிக்க வச்சிட்டாளேங்கற அவமானம் தாங்காம தற்கொலை பண்ணிக்கிட்டாங்க!

யாருமில்லாத அனாதையா நின்ன திலகாவை என் வீட்டுக்கு கூட்டிக்கிட்டுப் போனேன். அவளை சமாதானம் பண்ணி கருவை கலைக்க சொல்லி எப்படியோ சம்மதிக்க வச்சேன். ஆனா, அது விஷயமா டாக்டரை சந்திச்சப்பதான் ஒரு உண்மை தெரிஞ்சது.

திலகா ஒரு இதய நோயாளி. இதயத்தில் ஓட்டை விழுந்திருக்கு. அவ கர்ப்பம் தரிக்கவும் கூடாது. கர்ப்பம் தரிச்சா, அதை கலைக்கவும் கூடாது. திலகாவை எந்த விதத்திலும் காப்பாத்த முடியல... குழந்தை பிறந்தப்ப திலகா உயிரோட இல்லே..."

"அப்ப... அப்ப... அந்த குழந்தை?"

"தெரியலை. யாரோ தூரத்து உறவுக்காரங்க, திலகாவோட அண்ணன்னு சொல்லிக்கிட்டு குழந்தையை எடுத்துக்கிட்டுப் போய்ட்டாங்க. எனக்கும் உடனே கல்யாணம் ஆனதால... அந்த ஊரோட பந்தம் அதோட அறுந்துபோச்சு!"

"சுபத்ரா... திலகாவை ஏமாத்தற எண்ணமே எனக்கில்லே! இந்த விஷயம் எதுவுமே எனக்குத் தெரியாது. மூணு வருஷம் கழிச்சி வந்தப்ப... திலகா இந்த உலகத்திலே இல்லேங்கற செய்தி மட்டுமே என்னை வரவேற்றது. அவளுக்கு குழந்தை பிறந்த செய்திக்கூட எனக்குத் தெரியாது. நான் ரொம்ப பாவம் பண்ணிட்டேன் சுபத்ரா! இப்ப என் குழந்தை... அது... ஆணா, பெண்ணா?"

"ஆண்தான்!"

"எனக்குப் பார்க்கணும் சுபத்ரா! என் குழந்தைய பார்க்கணும். கண்டிப்பா பார்க்கணும்!"

"உறவுகள் எப்பவுமே, நிரந்தரமா பிரியறதில்லே சங்கர்! கண்டிப்பா



உங்க மகனை நீங்க பார்க்கத்தான் போறீங்க. திலகாவோட ஆத்மா... உங்களுக்கு உங்க மகனை அடையாளம் காட்டும்!"

சங்கரன் அங்கிருந்து விடைபெறும்போது... பெரும் மனச்சுமையோடு தான் விடைபெற்றார்.

## 9

அம்மா கோவிலுக்குச் சென்றிருக்கிறாள் என்றறிந்ததும் ஜனனி முகம் கழுவி, காபி போட்டு குடித்து கொல்லைப்புறம் சென்றாள்.

அவள் எதிர்பார்த்தபடி புனிதா அங்கிருந்தாள்.

"புனிதா...!"

"வாக்கா...!"

"ஏதோ யோசனையிலே இருந்தே போலிருக்கே!"

"ஆமா! நான் உன்கிட்டே முக்கியமான விஷயம் பத்தி பேசணும்க்கா!" புனிதாவின் முகம் டென்ஷனை பூசிக் கொண்டிருந்தது.

"பேசேன்!"

"உனக்கு எப்ப கல்யாணம்?"

இந்த கேள்வியில் அதிர்ந்துதான் போனாள் ஜனனி.

"என்னடி திடீர்னு?"

"சொல்லுக்கா... எப்ப கல்யாணம் பண்ணிக்கப்போறே?"

"இப்ப இந்த கேள்வி எதுக்கு?"

"அவசியமாதான்! அக்கா இருக்க, தங்கை முதல்ல கல்யாணம் பண்ணிக்கக் கூடாதில்லையா?"

"புனிதா... நீ என்ன சொல்றே?"

"இனி மறைச்சு பிரயோஜனமில்லே! நான் படிச்சு, வேலைக்குப் போய், என் கல்யாணத்துக்காக பணம் சேர்த்து, அதுக்கப்புறம் கல்யாணம் பண்ணிக்கணும்னா இன்னும் முழுசா ஆறு வருஷமாகும். அவ்வளவு நாள் காத்திருக்க மோகன் தயாராயில்லே!"

"மோகன்?"

"அவரைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்!"

ஜனனி புனிதாவை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

காதல் என்று உள்ளே புகுந்துவிட்டால், மூங்கிலில் புகுந்த காற்றுப் போல ஊமைகூட பேசிடுமே!

"புனிதா உனக்கு இந்தளவு தைரியம் எங்கிருந்து வந்தது? கொஞ்சம் கூட பயமில்லாம, வெக்கமில்லாம இப்படி பேச எப்படி கத்துக்கிட்டே?"

"நான் ஏன்க்கா பயப்படணும்? பெண்களுக்கு வாழ்க்கைங்கறது சில பேருக்கு ரோஜாவைப் பறிக்கிற மாதிரி... லாவகமா, கைக்கெட்டின தூரத்தில் கஷ்டப்படாம பறிச்சிடறாங்க. சிலபேருக்கு மாத்து மேலே ஏறி பழம் பறிக்கிற மாதிரி கஷ்டப்பட்டுதான் பறிக்க வேண்டியிருக்கு. பல பேருக்கு வானத்து நட்சத்திரத்தை பறிக்கற அளவுக்கு எட்டா தொலைவில... வெறும் கனவாகவே முடிஞ்சிப் போகுது... ஆனா, எனக்கு

கைக்கெட்டற அளவுக்கு நான் பறிக்க ஒரு ரோஜா காத்திருக்கு. அதை முட்டாள்தனமா, படிப்பு, குடும்பம்னு காரணம் காட்டி கையைக் கட்டிக்கிட்டிருக்கிற தப்பை செய்ய நான் விரும்பலே. பைசா எதிர்பார்க்காம என்னை கல்யாணம் பண்ணிக்க அவர் தயாராயிருக்கார்."

புனிதா சொல்வதில் ஒரு நியாயம் இருப்பதை ஜனனி உணர்ந்தாள்.

தங்கையைப் பார்த்து புன்னகைத்தாள்.

"பரவாயில்லே புனிதா! எல்லோரும் கொஞ்சமாவது சுயநலமா இருந்தாதான் இந்த காலத்தில பொழைக்க முடியும். கொஞ்ச நாள் வெய்ட் பண்ணு புனிதா! பெரியவங்களோட ஆசீர்வாதத்தோட இந்த கல்யாணத்தை நடத்திடலாம். அதுக்கு முன்னால நான் மோகனைப் பார்க்கணும், பேசணும்! அவர் என்ன பண்றார்? அப்பா, அம்மா, எல்லா விபரத்தையும் தெரிஞ்சுக்கணும்.

நிம்மதியாய் மூச்சுவிட்ட புனிதா அக்காவின் கையை நன்றியோடு பற்றி அழுத்தினாள்.

"ஏற்பாடு பண்றேன்க்கா!"

'இன்று எப்படியாவது கௌதமிடம் திருமணம் பற்றி பேசி முடிவெடுக்க வேண்டும். புனிதாவிற்கு நல்ல வாழ்க்கை காத்திட்டிருக்கும் போது... என்னால் அது இழுபறியாகிவிடக் கூடாது. என் திருமணம் நடக்காமல் அவளுக்கு முதலில் நடந்தாலும் நம் குடும்பத்தைப் பற்றி தவறாகப் பேசுவார்கள். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் என் திருமணம் நடந்தாகணும். கௌதமை வீட்டிற்கு வரவழைத்து அம்மா விடம் முறைப்படி பேசச் சொல்ல வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டாள் ஜனனி.

அந்த அலுவலகத்தில் நித்திலன் அனைவரிடமும் சிநேகமாய் பழகிய விதம் எல்லோருக்கும் பிடித்திருந்தது. ஆனால், ஜனனியை பார்க்கும் போது மட்டும் பேச்சு தொண்டைக் குழியிலேயே அமிழ்ந்துப் போகும். மனசுக்குள் அவனாகவே அவளைப்பற்றி பெரிதாய் கற்பனை செய்து, குடும்பமே நடத்திக் கொண்டிருந்தான். புதிதாய் ஒரு பேனா வாங்கினால் முதலில் கிறுக்கிப் பார்ப்போமே... அந்த கிறுக்கலுக்கு பதிலாக ஜனனி என்றுதான் எழுதினான் அந்த கிறுக்கன்.

இதற்குமேல் தாங்காது என்று நினைத்தவன் முகேஷை தன் காரிலேயே அழைத்துக் கொண்டு பீச் ரோடு பக்கமாய் வண்டியை செலுத்தினான் நித்திலன்.

நெடுநேரம் எதுவும் பேசாத நித்திலன் கடற்கரை பிளாட்பாரத்தில் வண்டியை பார்க் செய்து இறங்காமல் அதிலேயே அமர்ந்திருந்தான்.

"அவனாகப் பேசட்டும்" என்று விஷயம் புரியாமல், பனிவாய் அமர்ந் திருந்தான் முகேஷ்.

"முகேஷ்... ஆர்... யூ... மேரீட்?"


"இல்ல சார்!"

"காதல் அனுபவம் இருக்கா?"

திகைத்துப் போனான் முகேஷ். இதெல்லாம் எதற்காக கேட்கிறான்?

"இ... இருக்கு சார்!" என்றான் வேதனையை வெளிக் காட்டாமல்.





"வெரிகுட்! அப்ப என்னோட ஃபீலிங்கை உங்களால் நிச்சயம் புரிஞ்சுக்க முடியும்!"

முகேஷ் இன்னும் திகைப்பிலிருந்து விடுபடவில்லை.

'பைத்தியக்காரன்போல் ஏதேதோ உளறுகிறானே? நிஜமாகவே நார்மலாகத்தான் இருக்கிறானா? காதல் பற்றி என்னிடம் பேசுகிறானே! ஏன்?'

"என்ன முகேஷ்' சம்பந்தா சம்பந்தமில்லாம ஏதேதோ பேசுகிறானே என்று நினைக்கிறீர்களா?"

"இ- இல்லே சார்!"

"சரி விஷயத்துக்கு வர்றேன். நம்ம மானேஜரோட அஸிஸ்டன்ட் ஜனனியைப் பத்தி நான் தெரிஞ்சுக்கணும். அவளோட காரெக்டர், குடும்பம் எல்லாமே!"

ஏன் எதற்கு என்று எதிர்கேள்வி கேட்க முடியவில்லை. சம்பளம் தர்ற முதலாளியாச்சே!

"ரொம்ப நல்ல பொண்ணு சார்! குணத்துல தங்கம். நடத்தையில நெருப்பு! புடம்போட்ட தங்கம். அப்பா இல்லே! அம்மாவும், ரெண்டு தங்கையும்தான். குடும்பச்சுமை இவளோட தலையிலே."

"ஸோ... புவர் கேர்ள்" நித்திலன் யோசித்தான்.

"சார்... இதெல்லாம் எதுக்காகன்னு..."

"அவனை வேலைய விட்டே தூக்கப் போறேன்."

"சார்... பாவம் சார்! ரொம்ப கஷ்டப்படற பேமிலி!" பதறிப் போனான்.

"தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க முகேஷ்! அவளுக்கு இதைவிட பெரிய பொறுப்பான வேலை தரப்போறேன். எனக்கு மனைவிங்கற பொறுப்பான பதவி!"

ஒரு சதவீதம் கூட முகேஷ் இதை எதிர்பார்க்கவில்லை.

'ஜனனி இதற்கு சம்மதிப்பாளா? ஒருவேளை பணத்தைப் பார்த்து மதி மயங்கலாம். ஆனால், கௌதம்? அவன் பாவம்! கடைசியில் ஏமாறப் போகிறவன் அவன்தானா?

இதுநாள் வரை கௌதம் மீது வஞ்சம் கொண்டிருந்த அவன் ஏனோ, இப்போது மிகவும் பரிதாபப்பட்டான்.

"என்ன கௌதம்? பேசாமலேயிருந்தா என்ன அர்த்தம்?" கேட்டது ஜனனி. கேட்ட இடம் அண்ணாநகர் டவர்! ஒரு கல்மேடையில் அமர்ந்திருந்தனர் இருவரும்.

"இல்லே ஜனனி! ஒரு வருஷத்துக்குப் பிறகு கல்யாணம் பண்ணிக்கலாம்னு ஐடியா பண்ணியிருந்தேன். அதுக்குள்ளே ஒரு சின்ன தொழில் தொடங்கலாம்னு நினைச்சிருந்தேன்!"

"பணம்?"

"மறுபடி... அது சஸ்பென்ஸ்! இப்ப சொல்லமாட்டேன். தொழில் தொடங்க கிடைத்திட்ட பணம் ரெடி!"



அவன் நண்பனொருவன் புது பிஸினஸுக்கு தான் பணம் தருவதாகவும், கௌதமை வொர்க்கிங் பார்ட்னராகவும் இருவரும் இணைந்து செயல்படுவதாக முடிவு! இதை காரியம் எல்லாம் முடிந்தபின் சொல்வதில்தான் த்ரில்லே உள்ளது என்று கௌதம் சொல்லாமல் விட்டதுதான் எவ்வளவு பெரிய தவறு?

"என்கிட்டே மறைக்கிற அளவுக்கு உங்கக்கிட்ட ரகசியம் இருக்கா?"

"ஆமாம்! பெரிய ரகசியமே இருக்கு...!"

"அந்த ரகசியத்தை நீங்களே பத்திரமா வச்சுக்குங்க. நான் சொன்ன பிரச்சனைக்கு என்ன பதிலை சொல்லப் போறீங்க?"

"நம்மால புனிதாவோட கல்யாணம் தடைபட வேண்டாம். நம்ம கல்யாணம் இன்னும் ரெண்டு மாசத்துல வச்சுக்கலாம். அடுத்த வாரம் உங்கம்மாவை பார்த்து பேசறேன். இப்ப சந்தோஷம்தானே?"

'பச்சக்' என்று அவன் எதிர்பாராத ஒரு நொடிப்பொழுதில் அவன் கன்னத்தில் முத்தமிட்டு தன் சந்தோஷத்தை வெளிப்படுத்திய ஜனனியின் முகம் பூவாய் மலர்ந்திருந்தது.

ஜனனியின் மேசை மீதிருந்த இன்டர்காம் அலறியது. எடுத்து காதுக்கு கொடுத்தவள் விறைப்பானாள்.

"எஸ்... சார்!"

"......"

"வருகிறேன் சார்!" ரிசீவரை வைத்துவிட்டு எழுந்தாள்.

"எங்கே போறே?" கௌதம் கேட்டான்.

"எம்.டி. கூப்பிடறார்!" என்று கூறிவிட்டு கிளம்பினாள்.

அடுத்த சில நொடிகளில் நித்திலன் முன்பு நின்றாள்.

ஏசியிலும் வியர்த்தது.

'வா... என் தேவதையே!' என்றான் மனதிற்குள்.

"உக்காருங்க ஜனனி!"

அமர்ந்தாள்.

நித்திலன் கம்பீரமாய் ரோலிங் சேரில் சாய்ந்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நித்திலன் அழகாய் இருந்தான். பால்கோவாவில் செய்ததுபோல சருமம் மினுமினுத்தது.

"மிஸ்... ஜனனி..."

"சார்..."

"நீங்க நாளையிலேர்ந்து வேலைக்கு வரவேண்டாம்!"

"சா...ர்!" அதிர்ச்சியாய் பார்த்தாள்.

"நோ... நோ... ரிலாக்ஸ் ஜனனி! நான் சொல்றதை முழுசா கேட்டுட்டு அப்புறமா ஷாக்காகலாம்!"

"ஜனனி... என்னைப்பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

'காரணமில்லாம வேலைய விட்டு தூக்கறியே பாவின்னு'தான நினைப்பேன்.

"ப்ளீஸ்... பேசுங்க... என்னைப்பத்தி என்ன நினைக்கறீங்க?"

"ஜெ... ஜென்டில்மேன்..."

"அவ்வளவுதானா? இங்கே பாருங்க... எனக்கு எவ்வளவு சொத்து இருக்கும் தெரியுமா? நூறு கோடி! என் பாரென்ட்ஸுக்கு ஒரே பிள்ளை! லண்டனிலேயே பிறந்து வளர்ந்தாலும் இதுவரைக்கும் லேடீஸ், ஹாட்ரிங்ஸ் எதையும் தொட்டதில்லே! என்னோட கனவெல்லாம் ஒரு இந்திய தமிழ்ப்பெண் என் மனைவியாகணும். அந்தப் பெண்ணை நான் மனசுக்குள்ளேயே வரைஞ்சேன். அவள் என் கனவிலேயும் அடிக்கடி வந்தா... ஆனா. என்ன ஆச்சர்யம் பாருங்க... அவளை நான் இந்த ஆபீசிலே, நேரிலேயே பார்த்துட்டேன்!"

'இந்த கதையெல்லாம் எனக்கெதற்கு? எதற்காக என்னை வேலையை விட்டு தூக்கறே? அதைச் சொல்லாம...'

"இன்னும் புரியலையா ஜனனி? அந்த அதிர்ஷ்டக்காரப் பெண் வேற யாருமில்லே? நீதான்... நீயேதான்!"

தலையில் பெரிய இடியே விழுந்த அதிர்ச்சியில் வாய்க்கூடத் திறக்க இயலவில்லை. அவன் பாட்டுக்கு ஏதேதோ பேசிக்கொண்டே போனான்.

"நான் அப்பாவுக்கு தகவல் கொடுத்து நாளைக்கு வரச்சொல்றேன். முறைப்படி அவர் உங்க வீட்டுக்கு..."

"சார்!" குரல் கடுமையை பூசியிருந்தது.

"என்ன ஜனனி?"

"நீங்க யாரு? நான் யாரு? என் கல்யாண விஷயத்தைப் பத்தி முடிவு செய்ய நீங்க யாரு? உங்கக் கிட்டே கைநீட்டி சம்பளம் வாங்கினா, நீங்களா இஷ்டப்பட்டு முடிவு செய்தா அதுக்கு நான் கட்டுப்படணுமா?"

"ஜ...ன...னி!" நித்திலன் இப்படியொரு பதிலடியை எதிர்பார்க்கவில்லை.

"எல்லாமே கேட்டீங்களே! ஒரு வார்த்தை... உனக்கு இதில் விருப்பமான்னு கேட்டீங்களா? பணக்காரர்ங்கற திமிர்தானே? எனக்குன்னு மனசு இருக்கு. விருப்பம் இருக்கு. அதை பணத்தைக் காட்டி மாத்தலாம்னு தப்புக் கணக்குப் போடாதீங்க! நான் ஒருத்தரை காதலிக்கிறேன். வேற யாருமில்லே. மானேஜர் கௌதம்தான். அவருக்கும் எனக்கும் கூடிய சீக்கிரம் கல்யாணம்! வந்து வாழ்த்துங்க. நீங்களா என்னை நிறுத்த வேண்டாம். நானே இந்த வேலைய ரிஸைன் பண்றேன். குட்பை சார்!" ஆவேசமாய் படபடவென பொரிந்துவிட்டு எழுந்து போய் விட்டாள்.

நித்திலன் விழிகள் அகல... வெகுநேரம் அவள் போன திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்னையா... என்னையா வேண்டாம் என்கிறாள்? என்னையா... என்னையா...?'

அதிர்ச்சியும், அவமானமும் அவனை அலை கழித்தது. ஒவ்வொரு மலராய் எடுத்து தொடுத்து வைத்திருந்த பூமாலை, பிய்த்து எறியப் பட்டது. ஆயிரம் அம்புகள் ஒருசேர வந்து தைத்த வேதனையில் இதயம் நைந்து போனது.

அதிர்ச்சி தந்த இறுக்கம்... கண்களை இருள வைத்தது. அப்படியே மயங்கி சரிந்தான் நித்திலன்.



"இன்னைக்கும் என்னால ஆபீஸ்க்கு வரமுடியாது கையெழுத்து போடவேண்டிய ஃபைல்லை வீட்டுக்கு அனுப்புங்க!" போனில் சொல்லிக் கொண்டிருந்த கணவனை கவலையாய் பார்த்தாள் கஸ்தூரி.

"நீங்க பண்றது எதுவும் சரியில்லேங்க. ஆபீஸ் போய் நாலு நாளாச்சு!"

"என்னால முடியல கஸ்தூரி! திலகாவோட சாவுக்கு நான் காரணமாயிட்டோமோன்னு குற்ற உணர்வுல தத்தளிச்சிட்டு இருக்கேன்."

கஸ்தூரிக்கு எல்லா விஷயமும் தெரியும். திருமணத்தின்போதே சங்கரன் எல்லாமே அவளிடம் சொல்லியிருந்தார்.

"எப்படி நீங்க காரணமாக முடியும்? அவங்களை கல்யாணம் பண்ணிக்கணும்னுதானே முடிவு பண்ணியிருந்தீங்க! விதி... அவங்களோட வாழ்க்கையை முடிச்சிடுச்சு. நடந்தது நடந்துப் போச்சு. அதையே நினைச்சி வருத்தப்படறதால என்ன லாபம்?"

"எனக்கு இந்த உலகத்திலே இன்னொரு மகன் இருந்திருக்கிறான். அந்த விஷயமே எனக்கு இருபத்தெட்டு வருஷம் கழிச்சிதான் தெரியுது. இதைவிட கொடுமையான விஷயம் வேறென்ன இருக்க முடியும்?"

"............"

"கஸ்தூரி! அந்த பிள்ளை இப்ப உயிரோட இருப்பானா?"

"இருப்பான். இருக்கணும்! நம்ம பிள்ளை நமக்கு கிடைப்பான்!"

"அவனை எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்கணும். நான் திருச்சிக்குப் போய் திலகாவோட உறவுக்காரங்களை விசாரிக்கப் பார்க்கலாம்னு இருக்கேன்!"

"நானும் கூட வர்றேங்க!"

அப்போது போன் அலறியது.

சென்னையிலிருந்து நித்திலனின் உதவியாளர் ஜார்ஜ் பதட்டமாய் சொன்ன அந்த தகவல் சங்கரனை புரட்டிப் போட்டது.

கண்கள் வியர்த்து வியர்த்துப் பொங்கி வழிந்தது.

நித்திலன் இப்படியொரு முடிவை எடுப்பான் என்று சங்கரனும் கஸ்தூரியும் கற்பனைக்கூட செய்ததில்லை. நல்லவேளை... பிழைத்து விட்டான்.

வேறொன்றுமில்லை! தான் வரைந்து வைத்து இதயத்தில் பொக்கிஷமாய் பாதுகாத்த ஓவியம் தனக்கு சொந்தமில்லை என்ற உண்மையை நித்திலனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் கேட்டு அவள் மறுப்பதா? இது எப்படி நடக்கலாம்?

காதல் வலி ஒருபுறம். கேட்டு கிடைக்காத அவமானம் ஒருபுறம். கோழையான மனது தற்கொலையை நாடியது. கை நிறைய தூக்க மாத்திரைகளை உட்கொண்டான்.

வேலைக்காரர்கள் பார்த்து, பதறி, ஹாஸ்பிடலில் சேர்த்தனர். கோமாவை தொட முயற்சித்துக் கொண்டிருந்தவனை டாக்டர்கள் எப்படியோ இழுத்து வந்து விட்டனர்.

கஸ்தூரியின் முகம் அழுததில் சிவந்து உப்பிப் போயிருந்தது.

கண் திறந்தான் நித்திலன். அடையாளம் உணர்ந்து பெற்றோரை பார்த்ததும் கண் விளிம்புகளில் முத்துக்கள் அரும்பின.

"ஏம்ப்பா... எதற்காக இப்படியொரு முடிவை தேடிப்போனே?"

"நா... நான் தோத்துட்டேம்ப்பா!"

"நீயா? எதிலே?"

"ஜனனி... என்னை வேணாம்னுட்டா?"

"ஜனனி?"

"நான் சொன்னேனே அந்தப் பொண்ணு!"

"யார் அவள்?"

"நம்ம ஆபீசிலே பி.ஏ.வா வொர்க் பண்றா..."

"நம்ம ஆபிசிலே..... கோபமாய் வார்த்தை வெளிப்பட கஸ்தூரி சட்டென கணவனின் கரத்தைப் பற்றி அழுத்தினாள்.

'கவுரவம் பார்க்கிற நேரமா இது?' என்றது பார்வை.

"சரி... அதுக்காக சாகணுமா?"

"உங்களுக்குத் தெரியாது டாடி! ஜனனியை நான் நேர்ல பார்க்கறதுக்கு முன்பிருந்தே நான் நேசிச்சேன். அவ இல்லேன்னா, நான் இல்லே..."

"நித்தி.... விரல் சொடுக்கினா ஆயிரம் பொண்ணுங்க க்யூவில நிப்பாங்க. அதைவிட்டு யாரோ ஒருத்திக்காக....."

"டா...டி!" என்றான் ஆத்திரமாக.

"ஜனனி என் மனைவி! அதை யாராலும் மாத்த முடியாது. அவளை கேவலமா பேசறதை நான் அனுமதிக்க முடியாது!"

"நித்தி... அவ உன்னை...."

"வெறுக்கலாம்! பட், நான் வெறுக்கலே! எனக்கு அவ வேணும்!"

"எப்படிப்பா.... அவதான்...

"எனக்கு அதெல்லாம் தெரியாதுப்பா! நான் உங்களுக்கு வேணும்னா.... அவ எனக்கு வேணும். அவ இல்லாத வாழ்க்கைய நினைச்சிக்கூடப் பார்க்க முடியாமதான் சாக துணிஞ்சேன். அப்புறமும் ஏன் காப்பாத்துனீங்க! உயிரோட அணு அணுவா கொல்றதுக்கா.... நோ... டாடி! ஐ வாண்ட் ஜனனி! அவ இல்லேன்னா..... எனக்கு உயிர் இல்லே... அது மட்டும் நிச்சயம்!" நரம்புகள் புடைக்க கத்தினான்.

**ஜ**னனி வேலையை ரிஸைன் பண்ணிவிட்டாள். கௌதமிடம் அதன் வீரியம் அவனை பாதிக்காதளவு விஷயத்தை சொன்னபோது துடித்துப்போனான். இரண்டு மாதம் என்ற கால வரையறையை சுருக்கி பத்து நாட்களுக்குள் திருமணத்தை நடத்திவிட முனைந்தான்.

நித்திலனின் தற்கொலை முயற்சி பற்றி அலுவலகம் மொத்தமும் கவலையாய் விவாதித்தது. காரணம் தெரியாமல் குழம்பியது. முகேஷிற்கு புரிந்தது. கௌதமும், ஜனனியும் வெகுவாய் வருத்தப்பட்டனர்.

கௌதம் ஒரு குறிப்பிட்ட நாளை முடிவு செய்து ஜனனியின் வீட்டிற்கு அவளின் தாயாரிடம் பெண் கேட்கப் போனபோது அவனுக்கு



முன்பே தன் மகனுக்காக கவுரவம் உதறி நித்திலனின் தந்தை சங்கரன் பெண் கேட்க வந்திருந்தார். வாசலிலேயே கப்பல்போல் கார் நிற்பதைப் பார்த்து தன்னிச்சையாக வந்த வழியே திரும்பிப் போய் விட்டான் கௌதம். ஜனனி சங்கரனிடம் ஒரேயடியாக மறுத்தாள்.

"உங்க பிள்ளைக்காக இந்த ஏழைங்க வீட்டுக்கு கவுரவம் பார்க்காம வந்ததுக்கு பெருமைப்படறேன். ஆனா, என்னை மன்னிச்சிடுங்க! உங்க பிள்ளை என்னை விரும்பற மாதிரி நானும் கௌதமை விரும்பறேன். அவர்தான் என் புருஷன்!"

"என் மகனைவிட அவன் எந்தளவில் உசத்தி?"

"நான் பணத்தை வச்சு எடைபோடறதில்லே சார்! கௌதம் ஒரு ஜென்டில்மேன்! நல்லவர். அதுபோதும் எனக்கு"

"நல்லவன்னு எதை வச்சு சொல்றே? அவர் பேரிலே ரொம்ப நாளாகவே கம்ப்ளைன்ட்ஸ் வந்துகிட்டு இருக்கு. அதை எல்லாம் தோண்டிப் பார்த்து ஆக்ஷன் எடுத்தா... அவன் கம்பி எண்ணுவான்"

"மிரட்றீங்களா?"

"மிரட்டல் இல்லே. நிஜம்! என் மகனுக்காக நான் இதை சொல்லலே! யோசிச்சுப் பார்! இப்படியெல்லாம் உன்கிட்டே கெஞ்சணும்னு எனக்கு அவசியமில்லே. வந்து கெஞ்சறேன்னா... அதுக்குக் காரணம் நித்திலன். அவன் உன்மேல வச்சிருக்கிற அன்பு! அந்த அன்பு பெரிசா? கௌதமோட அன்பு பெரிசான்னு நினைச்சுப் பார்!"

"சார்... ப்ளீஸ் புரிஞ்சுக்குங்க! ஐ லவ் கௌதம்! திடீர்னு வந்து மனசை மாத்திக்கன்னா... உடனே மாத்திக்கறதுக்கு இதென்ன சட்டைத் துணியா?"

அதுவரைக்கும் பொறுமையாய் இருந்த பார்வதம் முன்னால் வந்தாள்.

"ஐயா... அவ சின்னப் பொண்ணு! அவளுக்கு என்னத் தெரியும்? நான் எடுத்து சொல்லி... புரிய வச்சு உங்களுக்கு நல்ல தகவல் சொல்றேன்."

சங்கரன் நம்பிக்கையில்லாமல்தான் புறப்பட்டார். அவர் போனபின் அம்மாவுக்கும், மகளுக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

மறுநாள் கௌதமிடம் சண்டைபோட்டாள் ஜனனி.

"நீங்க ஏன் நேத்து வர்றேன்னுட்டு வரலே?"

"இன்னொரு நாளைக்கு வர்றேன் ஜனனி. நேத்து நாள் சரியில்லேன்னு சொன்னாங்க!"

"நேத்து நித்திலனோட அப்பா எங்க வீட்டுக்கு வந்திருந்தார் கௌதம்"

"தெரியும்"

"எப்படி?"

"நானும் வந்தேன். அவர் வந்திருக்கார்னு தெரிஞ்சுதான் திரும்பிப் போய்ட்டேன்!"

"ஏன் அவரை ஃபேஸ் பண்ண உங்களுக்கு தெரியமில்லையா?"

"தெரியலை. ஆனா ஏதோ ஒண்ணு என்னை வரவிடாம தடுத்து விட்டது.

"கௌதமை விநோதமாகப் பார்த்தாள் ஜனனி!

அலுவலக நேரம் முடிய இன்னும் பத்து நிமிடம் இருக்க கௌதம் புறப்படத் தயாரானான். ஜனனி இல்லாத அறை வெறிச்சோடியிருந்தது. அங்கிருக்கவே பிடிக்கவில்லை.

அறையில் சலசலப்பான குரல்கள் கேட்க நிமிர்ந்தான்.

காக்கி உடை தரித்த இரண்டு பேர், ஜலேந்திரன், கூடவே சென்ட் வாசத்தோடு, பணக்கார வாசம் கலந்த கம்பீரத்தோடு ஒரு பெரிய மனிதர்.

வியப்பாய் பார்த்தான் அவர்களை.

"இவர்தான் இன்ஸ்பெக்டர் எங்க ஆபீஸின் மேனேஜர் கௌதம்" ஜலேந்திரன் சுட்டிக்காட்டவும் அத்தனை பேரும் அவனை பார்வையால் துளைத்தெடுத்தனர்.

சங்கரன் அவனை பார்க்கையில் இதற்கு முன் எங்கோ பார்த்தது போல் ஒரு நினைவு.

இன்ஸ்பெக்டர் அவன் அருகில் போனார்.

"மிஸ்டர் கௌதம்! இந்த நிறுவனத்தோட ரகசிய ஃபார்முலாக்களை திருடி வெளியில எதிர் பார்ட்டிக்கு விற்பதாக தகவல் வந்திருக்கிறது. உங்க எம்.டி. கொடுத்த புகாரின்படி உங்களை நாங்க ஆராய வேண்டியிருக்கிறது"

"எ... என்னையா?" மின்சாரம் தொட்ட அதிர்ச்சி.

"உங்களையேதான்!"

"நோ... இது சதி! இதை நம்பாதீங்க!"

"அதை நாங்க கண்டுபிடிக்கிறோம் மிஸ்டர் கௌதம்" என்றபடி அவன் மேஜை, கப்போர்டுகளை ஆராய்ந்தனர். கடைசியாய் அவன் கையிலிருந்த ப்ரீப்கேஸை வாங்கிப் பார்த்தனர்.

திறந்ததும் மேலேயே இருந்தது அந்த ஃபார்முலா அடங்கிய பைல்!

"அதைப் பார்த்ததும் நோ..." என்றலறினான்.

"இல்லே இன்ஸ்பெக்டர்! இது எப்படி வந்ததுன்னே தெரியாது"

"அதை கோர்ட்டுல வந்து சொல்லுமேன்!" என்றபடி அவன் கையைப் பற்ற ஆவேசமாய் திமிறினான். அந்த திமிறலில் ப்ரீப்கேஸ் கீழே விழுந்து காகிதங்கள் நாலாபுறமும் சிதறியது.

சங்கரனின் காலடியில் திலகாவின் போட்டோ பறந்து வந்து முதுகுகாட்டி விழ... அதை குனிந்து எடுக்க முற்பட அதற்குள் ஜலேந்திரன் எடுத்து பத்திரப்படுத்தினார்.

அதை மட்டும் சங்கரன் பார்த்திருந்தால்?

ஜனனியால் நம்ப முடியவில்லை.

கௌதமா? அப்படிப்பட்டவனா? இருக்க முடியாது. ஆனால், அவனுக்கும் பணத்தேவை இருந்ததை மறுக்க முடியாது! பெரிய தொழிலதிபர் ஆவதும் என்பது அவன் கனவு. ஏதோ பணம் கிடைக்கப் போகிறது என்று சஸ்பென்சாய் சொன்னானே... அது இந்தப் பணமா? திருட்டுப் பணமா?

கௌதம் திருடனா?



"சே... இருக்க முடியாது" ஒருவேளை இது சங்கரனின் சதியாகக் கூட இருக்கலாம்!

விடை காண முடியாமல் தடுமாறிய ஜனனி மறுநாள் ஜெயிலுக்கு சென்று மனுப்போட்டுப் பார்த்தாள்.

பதினைந்து நாள் ரிமாண்ட் செய்யப்பட்டிருந்த கௌதம் உள்ளம் கொதித்துப் போயிருந்தான். செய்யாத தவறுக்கு தண்டனை அனுபவிப்பதைவிட பெரிய தண்டனை இந்த உலகில் உண்டா?

வெறித்தப் பார்வையுடன் வந்த கௌதம் கம்பி வலைக்கு அந்தப்புறம் நின்றிருந்த ஜனனியை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் தலை தாழ்த்தினான்.

அந்த செய்கை அவளை சந்தேகப்பட வைத்தது. குற்றமுள்ள நெஞ்சு நிமிரவா செய்யும்?

அதனால், அந்த சந்தேகம் கொண்ட பெண்ணின் வாயிலிருந்து வரக் கூடாத கேள்வி வந்து விழுந்தது.

"ஏன் கௌதம் இப்படி பண்ணீங்க?"

அந்த கேள்வி ஆயிரம் தேள்களை ஒன்றாக விட்டு கொட்ட வைத்தது. நாகம்போல் தலைத் தூக்கிப் பார்த்தான்.

அப்படியானால்... இதை நீயுமா நம்பி விட்டாய் ஜனனி? நெஞ்சு வெம்பியது. சொல்லக் கூடாத பதிலை சொன்னான்.

"நான்தான் பண்ணினேன். பணத்துக்காக செய்தேன்" போதுமா பதில்?" ஆவேசமாய் சொன்னான்.

"சீ... நீயெல்லாம் ஒரு மனுஷனா? பணத்துக்காக நாளைக்கு கட்டினவளையே விக்க மாட்டேன்னு என்ன நிச்சயம். வெட்கப்படறேன் உன்னைக் காதலிச்சதுக்காக வேதனைப்படறேன் கௌதம்!" கண்ணீரையும், காதலையும் ஒரு சேர வழித்தெறிந்துவிட்டு போய் விட்டாள் ஜனனி.

வெகுநேரம் அவள் போன திக்கையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மெய் நின்று விழித்தது. பொய் நின்று புலம்பியது.

கல்யாண வேலைகள் தடபுடலாய் நடந்தன. நித்தியன் ஜனனியை காரில் அழைத்துக்கொண்டு ஊரைச் சுற்றினான். கௌதமிற்கும் இந்த கல்யாண செய்தி எட்டியது. கொதிக்கும் எண்ணெயில் தூக்கிப்போட்டது போல் துடித்தான்.

நோ... கூடாது. இந்த கல்யாணத்தை நடத்த விடமாட்டேன். நானென்ன ஏமாளியா? அனாதை என்றால் ஆளாளுக்கு எட்டி உதைக்க வேண்டுமா? அந்த சங்கரனும், நித்தியனும் உயிரோடு விட்டால்தானே இந்தக் கல்யாணம்?

கௌதம் தீவிரமாய் யோசித்தான். திட்டம் போட்டான். வயிற்று வலி என்று நடித்தான். அவன் எண்ணப்படி மருத்துவமனைக்கு கொண்டு வரும் வழியில் போலீசார் பிடியிலிருந்து தப்பித்து ஓடினான்.

**கெள**தம் இருந்த இடத்திற்கு முகேஷ் அமர்த்தப்பட்டான். மேனேஜர் சீட்டில் கம்பீரமாய் அமர்ந்திருந்தாலும் நண்பனுக்காக மனம் அழுதது. கௌதமைப் பற்றி அவனுக்குத் தெரியும். நிச்சயம் அந்த தவறை அவன் செய்திருக்க வாய்ப்பில்லை.

டேபிள் மீது கௌதம் கைப்பட்ட காகிதங்கள், பைல்கள் அத்தனையும் ஆராய்ந்தான். வேண்டாதவற்றை கிழித்து குப்பைக் கூடைக்குள் வீசியெறிந்தான். பேப்பர் வெயிட் கீழே ஒரு போட்டோ! இலகாவின் போட்டோ! எடுத்துப் பார்த்தவன் கண் கலங்கியது. கௌதம் இன்றும் வணங்கிய தெய்வம்.

திருமண நிகழ்ச்சிக்காக இன்னிசைக் குழு ஒன்றினை ஏற்பாடு செய்யும் பொறுப்பும், இன்னும் சில பணிகளையும் முகேஷிடம் பணித்திருந்தார் சங்கரன்.

மனக் கசப்போடுதான் அதையும் செய்தான். அது விஷயமாய் பேச உள்ளே வந்தார் சங்கரன்.

"சார்... கூப்பிட்டிருந்தா... நானே!"

"அதனாலென்ன... உக்காரு முகேஷ்! நான் சொன்ன காரியத்தையெல்லாம் செஞ்..." சட்டென பேச்சு தடைபட டேபிள் மீதிருந்த போட்டோவின் மீது பார்வை தீ வைத்தது.

"முகேஷ் அந்த போட்டோவை எடு!"

எடுத்துக் கொடுத்தான். பார்த்தவர் உச்சபட்சமாய் ஷாக்கானார்.

"தி...ல...கா..."

"இது... உனக்கு எப்படி? உங்கம்மாவா?"

"இல்லே சார்!"

"பி... பின்னே?"

"கௌதமோட அம்மா சார்!"

**10**

"**த**ப்பு பண்ணிட்டேன் கஸ்தூரி! என் பிள்ளைய நானே பழி வாங்கினேன். என் திலகாவுக்கு பண்ணின துரோகம் பத்தாதுன்னு என் பிள்ளைக்கும் துரோகம் பண்ணிட்டேனே!" சங்கரன் குழந்தையைப் போல் கதறினார்.

கஸ்தூரி தேற்றினாள். திருமணத்திற்கென நகைகளை வாங்கிக் கொண்டு சந்தோஷமாய் உள்ளே நுழைந்த நித்தியும் ஜனனியும் கூட உடைந்து போய் அழ ஆரம்பித்தனர்.

"அப்பா... தாமதமாகிற ஒவ்வொரு நிமிடமும் என் அண்ணன் நரகத்தில் துடிச்சிட்டிருப்பான். போங்கப்பா... போய் முதல்ல கேஸை வாபஸ் வாங்குங்க!"

"போறேன் நித்தி! என் பிள்ளைய முதல்ல இந்த வீட்டுக்கு கூட்டிட்டு வந்தாதான்... நான் நிம்மதியா மூச்சு விடுவேன்!" வெளியே புறப்பட்டார் சங்கரன்.

அதுநேரம்வரை மறைவிலிருந்து ஒட்டுக்கேட்ட கௌதமின் உடம்பில் புது ரத்தம் பாய்ந்தது.



• 'நான் அனாதையில்லை. இதோ என் அப்பா! என் தம்பி. என் ஜன... நோ... அவள் என் ஜனனியல்ல... நான் இவர்களோடு இணைந்து வாழ்வது சாத்தியமல்ல...' முன் வைத்த காலை பின் வைத்தான். வந்த வழியே நடந்து போனான்.

களைப்பு, வேதனை, மகிழ்ச்சி... எல்லாமே அவன் கண்களை மறைக்க... தறிகெட்டு எதிரே எமன் உருவத்தில் வந்துக் கொண்டிருந்த லாரியை பார்க்கவில்லை.

அவனை மோதி தூக்கியெறிந்தது! ரத்தப்படலமாய் கௌதம் சாலையை முத்தமிட்டான்.

**அ**ந்த அறையில் அனைவரும் குழுமியிருந்தனர். சங்கரன், கஸ்தூரி, ஜனனி, நித்திலன், முகேஷ், டாக்டர், நர்ஸ் என தன்னைச் சுற்றிலும் நின்றிருப்பவர்களை உணரும் சக்தியற்று எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் கௌதம்.

"டாக்டர் என் மகன் பேச மாட்டானா? வாய் நிறைய அப்பான்னு கூப்பிட மாட்டானா? நான்தான் உன் அப்பா... உனக்கு செய்யக் கூடாத துரோகத்தை செய்து தீராத பாவத்தை சுமந்திட்டிருக்கேன்னு சொல்லி அழணும். என் கௌதமை குணப்படுத்திடுங்க டாக்டர்... ப்ளீஸ்" சிறு குழந்தையைப்போல் கௌதமின் கைகளைப் பற்றி முகத்தில் வைத்து கதறி அழ ஆரம்பித்தார்.

கௌதமிடம் எந்த சலனமும் இல்லை.

"சாரி மிஸ்டர் சங்கரன்! விபத்துல தலையில பலமான அடிபட்டதால தன்னுடைய நினைவுத் திறனையும், பேசும் சக்தியையும் இழந்துவிட்டார். உங்களை நீங்களே தைரியப்படுத்திக் கொள்வதை தவிர வேறு வழியில்லை. ஆனாலும் காட்ஸ் கிரேட்! அவன் மனது வைத்தால் எதுவும் நடக்கும்" டாக்டர் பெருமூச்சு வெளிப்பட சொன்னார்.

நித்திலன் கௌதம் அருகில் வந்தான். அவன் தோளைப் பற்றி தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.

"அண்ணா... என்ன மோசமான சந்திப்பு இது? நான் எத்தனையோ நாட்கள் ஏங்கியிருக்கிறேன். நம்முடன் அண்ணனோ தங்கையோ, தம்பியோ பிறந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும்?' என்று அடிக்கடி நினைத்து வருத்தப்படுவேன். ஆனால், இன்று என் அண்ணன் எனக்கு கிடைத்தும் ஆசைதீர உன்னுடன் பேச முடியவில்லையே! உன்னோட இந்த நிலைமைக்கு இந்த பாவிதான் காரணம். என்னை மன்னிச்சிடுண்ணா... மன்னிச்சிடு" விம்மியழுதான்.

கஸ்தூரி அவனை தேற்றினாள். அவளுக்கும் கண்கள் அழுதழுது சிவந்திருந்தது.

அப்போதும் கௌதமிடம் சலனமில்லை.

ஜனனி அடிமேல் அடியெடுத்து கௌதம் அருகில் வந்தாள். அவன் காலடியில் அமர்ந்தாள். சத்தமின்றி அழ ஆரம்பித்தாள். அவள் கண்ணீர் கௌதமின் காலை நனைத்தது. வெகு நேரத்திற்குப் பிறகு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

நீண்டதொரு பெருமூச்சு ஜனனியிடமிருந்து எழுந்தது.

"ஸாரி... பேஷண்ட்டை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணக் கூடாது. தயவு செய்து அவரை தனியாக விடுங்கள். பெரிய டாக்டர் வரும் நேரம். இத்தனை பேர் இங்கேயிருப்பதைப் பார்த்தால் சத்தம் போடுவார்... ப்ளீஸ்..." டாக்டர் தயவாய் சொன்னார்.

"ஓக்கே டாக்டர்! எவ்வளவு பணமானாலும் சரி. என் மகன் குண மாகணும். டேக் கேர்! நாளை வருகிறேன் டாக்டர்" பிரிய மனமின்றி விடை பெற்றார். அவரைத் தொடர்ந்து முகேஷை தவிர அனைவரும் போய் விட்டனர்.

"டாக்டர் கௌதமிற்கு டிரஸ் மாற்ற வேண்டும்..."

"ஓக்கே என்றபடி டாக்டரும் விடைபெற முகேஷ் கதவை சார்த்தி உள்ளே தாளிட்டான்.

கௌதமின் வெறித்தப் பார்வையில் மாற்றமில்லை. முகேஷ் சில கணங்கள் தன் நண்பனையே வேதனையோடு பார்த்தவன் அவன் முகத்தைத் தன் கைகளால் ஏந்தி கிசுகிசுப்பதுப் போல் பேசினான்.

"கௌதம்... என்னிடம்கூட நீ நடிக்க வேண்டுமா?"

கௌதமுக்குள் சின்ன திடுக்கிடல்.

"நானும் ஆரம்பத்தில் நீ உணர்வினையும், பேசும் சக்தியையும் இழந்து விட்டாய் என்றுதானடா நம்பிக்கொண்டிருந்தேன். ஆனால், யார் கண்ணீரிலும் கரையாத உன் மனது, ஜனனி அழுதபோது மட்டும் உன் கண்கள் லேசாக துடித்ததைப் பார்த்தேன். உன் கால் விரல்கள் அசைந்ததைப் பார்த்தேன். நீர், நெருப்பு, காற்றுக்கு அடுத்தபடியாக வையகத்தை தலைகீழாக புரட்டும் சக்தி காதலுக்கு மட்டுமே உண்டு என்பதை நிரூபித்து விட்டாய்! சொல்...! ஏனிந்த மௌனம்? எதற்காக இந்த ஊமை நாடகம்?"

அப்போதும் அவனிடம் அசைவில்லை.

"நீ இப்போது பேசாவிட்டால்... அனைவரிடமும் உண்மையைச் சொல்லி எல்லோரையும் அழைத்து வந்து விடுவேன்."

கௌதமின் பார்வை இப்போது தாழ்ந்து வந்து முகேஷை பார்த்தது.

"ஏண்டா பாவி... இப்படி நடித்து கொல்கிறாய்? எதற்காக? இப்போது நீ விரும்பியதெல்லாம்... கிடைக்கும் தருணத்தில் எதற்காக.... இப்படி?"

"நீ யாரிடமும் சொல்லமாட்டேன் என்று சத்தியம் செய்தால் சொல்கிறேன்."

வாயைத் திறந்து பேசினான். கிட்டத்தட்ட பத்து நாட்களுக்கு பிறகு.

"இல்லை.... யாரிடமும் சொல்ல மாட்டேன். நம் நட்பின் மீது சத்தியமாக..."

"என்னால் தீபங்கள் எரியுமென்றால்... நான் தீக்குச்சியாய் இருப்பதில் வருத்தப்படவில்லை முகேஷ்."

"__________!"

"நான் கொல்லத் துணிந்த எதிரிதான் என் அப்பா என்றறிந்தபின் மகிழ்ச்சி ஒருபுறம்... வருத்தம் ஒருபுறம். நித்திலனின் தந்தையாய், பாசத்திற்காக என்னை வதைத்தார். அதை மன்னித்து விடலாம். ஆனால், ஒரு மூன்றாம் மனிதனை தன் மகனின் காதலுக்காக அவன் வாழ்க்கையை காலில் நசுக்கியது மனிதாபிமானமற்ற செயல். பணத் திமிர். அதற்காக



நிச்சயம் அவர் தண்டனை அனுபவித்துதான் ஆக வேண்டும். தன் மகன் என்று அறிந்த பின் என்னிடம் மனம்விட்டு பேசமுடியவில்லையே என்று துடிக்கிறார் பார்... அதுதான் தண்டனை! ஆனால் என் அம்மா பெயரில் உலகமெங்கும் நிறுவனங்களை நிறுவிய அன்பு என்னை சிலிர்க்க வைக்கிறது. இப்படிப்பட்ட மனிதருக்கு நான் பிறந்தேன் என்பதில் எனக்கு ரொம்ப பெருமை தெரியுமா?"

வியப்பாய் பார்த்தான் முகேஷ்.

"நித்திலன் மென்மையான இதயம் படைத்த நல்லவன். அவன் என்னைவிட அதிகமாய் ஜனனியை நேசித்திருக்கிறான். அதனால்தான் தற்கொலை முயற்சி வரைப் போய் விட்டான். இப்போது நான் இந்த நாடகம் ஆடாவிட்டால்... ஜனனியை எனக்கு திருமணம் செய்து வைப்பார்கள். நிச்சயம் அதை நித்திலனால் தாங்கிக்கொள்ள முடியாது. அவனுக்கு நான் நல்லது செய்யாவிட்டாலும், கெட்டது செய்ய விரும்பவில்லை...."

"...............!"

"ஜனனி! என் உயிரில் மூச்சில் கலந்த ஜனனி.... என்னுள் வேர் போல ஊன்றிவிட்ட ஜனனி! எனைத் தாங்கும் வேராக நான் அவளை நினைத்தேன். ஆனால், அவள் என்னை யாரோவாக நினைத்து விட்டாள். காதலில் சந்தேகம் கூடாது முகேஷ். தப்பே செய்திருந்தாலும்.... இவன் செய்திருக்க மாட்டான் என்ற நம்பிக்கை அடிமனம் வரை தங்கியிருக்க வேண்டும். ஜனனிக்கு என் மீது நம்பிக்கை யில்லை முகேஷ். நடக்க கூடாததெல்லாம் நடந்து விட்டது. இதயத்தில் விருந்த என் பெயரை அழித்து என் தம்பி பெயரை எழுதியபின் அதை மறுபடி அழித்து எழுத

# காக்கை...

சாலையில் நடந்தபொழுது
தலையில் அடித்த காக்கை
தீயசகுனம் - என
குளித்து கும்பிட்டேன்.

"காக்கா சனியன்" - என
வசைமாறி பொழிந்தேன்.

அமாவாசை விரதத்தின்போது
காக்கையாய்
வரும் அப்பாவிற்காய்
தவமிருந்தேன்.

காக்கை
அப்பாவா?
சனியனா?
மனசு குடைகிறது.



# நீ

எத்தனைதான்
நீளநீளமாய் கடிதமெழுதினாலும்
நீ
எழுதி அடித்த
வரிகளைத்தான்
படிக்கத் துடிக்குது
திருட்டு மனசு

— எஸ். சுரேஷ்

வைப்பதில் எனக்கு விருப்பமில்லை. ஜனனியை மறக்க, எனக்கு நூறாண்டுகள் வேண்டும். இருந்தாலும் என்னை நான் திடப்படுத்திக் கொண்டு விட்டேன்!" கண்களை துடைத்துக் கொண்டான்.

"அப்படியானால் ஜனனியை எதற்காகடா விட்டுக் கொடுக்கிறாய் முட்டாள்?"

"அன்பு தானாகவே கொடுக்கும், தன்னையே கொடுக்கும். அதை விலைக்கு வாங்க முடியாது முகேஷ். என் அன்பு விலை மதிப்பில்லாதது. விட்டுக் கொடுப்பதிலும் ஒரு சுகம் இருக்கவே செய்கிறது. அதுபோதும் எனக்கு."

"எவ்வளவு நாட்களுக்கு இந்த நாடகம்?"

"அவர்கள் திருமணம் நடக்கும் வரை!"

"அதன்பின்?"

உதட்டை பிதுக்கினான் கௌதம்.

பயமாய் பார்த்தான் முகேஷ்.

"பயப்படாதே! உயிரை மாய்த்துக் கொள்ளுமளவு கோழையல்ல நான்! டாக்டர் வரும் நேரம்... நீ போய் விடு. சத்தியம் நினைவிருக் கட்டும்."

முகேஷ் அவனை கட்டிப்பிடித்துக் கொண்டான். மூக்கு விடைத்து அடங்கியது.

"உன்னை நண்பனாக அடைய நான் புண்ணியம் செய்திருக்கிறேன் கௌதம்! என்னை மறக்காதே எப்போதும்!" முகேஷ் போய் விட்டான்.

**ப**த்து நாட்கள் கழித்து அனைத்து தினசரிகளிலும் அந்த விளம்பரம் வந்திருந்தது.

'படத்தில் இருக்கும் கௌதம் என்னும் இளைஞரை காணவில்லை. புத்தி சுவாதீனமில்லாதவர். பேச வராது. காணாமல் போன அன்று நீலநிற பேண்ட்டும், வெள்ளை நிற முழுக்கை சட்டையும் அணிந் திருந்தார். இவரைக் கண்டுபிடித்து தருபவர்களுக்கு ஒரு லட்சம் சன்மானம் தரப்படும்.

இப்படிக்கு
சங்கரன்

அந்த ஆங்கில நாளிதழில் வந்திருந்த செய்தியைப் படித்து சிரித்த கௌதம் 'மன்னிச்சிடுங்கப்பா... நான் உங்களுக்கு கிடைக்க மாட்டேன்' என்று முணுமுணுத்தான். முகத்தில் தாடி ஒட்டப்பட்டு அடையாளம் தெரியாதபடி மாறியிருந்தான். சண்டிகரில் சுரங்க தொழிலாளியாக தன் வாழ்க்கையை புதிதாக ஆரம்பித்திருந்தான். அவன் இருப்பிடம் முகேஷிற்குக்கூட தெரியாது.

மேலாளர் அழைக்கும் குரல் கேட்டு பேப்பரை விசிறியெறிந்து விட்டு ஓடினான் கௌதம். உள்ளத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டம். கௌதமும் போராடிக் கொண்டிருக்கிறான்.

(முற்றும்)



# 'தலை'யாய பிரச்னை!



திருமதி ராஜம்

### ஸ்டைல் தலைக்கு உலை!

- தலைமுடி உதிராமல் காக்க முதலில் டீன் ஏஜ் பெண்கள் முடியைத் தூக்கி வாரி அதில் டைட்டாக ஒரு க்ளிப் போடு வதைத் தவிர்க்க வேண்டும்.

இப்போது சென்னையில் Humidity அதிகமாக இருந்தாலும் எண்ணெய் தடவாமல் இருக்கக் கூடாது. வாரம் ஒருமுறை நல்லெண்ணெயைக் காய்ச்சி உச்சந்தலையில் அழுத்தித் தேய்த்து சிகைக்காய்தூள் கொண்டு அலச வேண்டும்.

### டீ தூள் போதும்!

- வழுக்கை விழுவதற்கு மூலகாரணம் ஷாம்பு வாஷ் செய்து தலையை நன்றாகத் தண்ணீரில் அலசாமல் டிரையர் போடுவதுதான். நன்றாக அலசாமல் இருப்பதால் ஷாம்புவின் கெமிக்கல்கள் தங்கி அந்த இடங் களில் நாளடைவில் முடி வளர் வதைத் தடுக்கிறது. இதற்கு வீட்டில் தினமும் பயன்படுத் தப்பட்ட டீ தூளைக் கொண்டு தலையை அலசினால் அந்த கெமிக்கல்கள் நீங்கி முடி வளர ஆரம்பிக்கும்.

### பேனுக்கு எதிரி துளசி!

- முடி வளராமல் இருப்ப தற்கு பேன் தொல்லையும் ஒரு காரணம். வெந்தயத்தைப் பொடி செய்து நல்லெண்ணெயுடன் மிளகையும் காய்ச்சி அதை சூடு உள்ள இடத்தில் சூடாகத் தேய்த்து சீயக்காய் கொண்டு அலசும்போது சூடு மறையும். பின்னர் பேன் தொல்லையி லிருந்து விடுபட துளசிச் சாறுடன் கற்பூரத்தைக் கலந்து தலையில் தடவி ஊறவைத்து தலையை அலசலாம். இதனைத் தைலமாக வும் தயாரிக்கலாம்.

### மூலிகை எண்ணெய் தயாரிக்கும் முறை

தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய், விளக்கெண் ணெய் இவற்றுடன் கருடபட்டை, பிஞ்சு கடுக்காய், பனங்கு சாம்பிராணி, ரோஜா மொட்டு

வெட்டி வேர், செம்பருத்தி பூ முதலியவற்றுடன் கீரைகளில் கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி, பொடுதலை, வெந்தயக்கீரை, பொன்னாங்கண்ணி இவற்றின் சாற்றைக் கலந்து தயாரிக்கும் மூலிகைத் தைலம், தேய்த்துக் குளிப்பதற்கும் மற்றும் தினமும் தடவிக் கொள்வதற்கும் நல்லது.

இளம் நரையைப் போக்க, சுத்தமான நல்லெண்ணையுடன் முழு நெல்லிக்காய் மற்றும் கறிவேப்பிலை இவற்றின் விழுதினைக் கொண்டு காய்ச்சித் தயாரிக்கும் எண்ணையைத் தேய்த்துக் குளிப்பதால் இள நரைகளைக் கட்டுப்படுத்தலாம். மிகவும் வறண்ட தலையுள்ளவர்கள் செம்பருத்தி பூ மற்றும் இலையை அரைத்து அதை நல்லெண்ணையுடன் கலந்து காய்ச்சி வாரம் இருமுறை தேய்த்துக் குளிப்பதால் வறண்ட ரோமம் பளபளப்புடன் மிருதுவாக பட்டுப்போல் மாறும். எண்ணைப்பசையுடன் கூடிய முகமுள்ளவர்கள் வெட்டிவேர் மற்றும் கறிவேப்பிலை, மருதாணி கொண்டு நல்லெண்ணையுடன் காய்ச்சி தயாரிக்கும் எண்ணையைக் கொண்டு வாரம் இருமுறை தேய்த்துக் குளிக்க தலையின் எண்ணைப்பசை முகத்தில் வழிவதைத் தவிர்க்கலாம்.

வெந்தயம், துவரை இலை இவற்றை அரைத்து தயிருடன் கலந்து தலையில் தடவி ஊறிய பின் தலையைத் தேய்த்துக் குளிப்பதனால் பொடுகுத் தொல்லை நீங்கும். *

கிராமப்புறங்களில் வயலில் வேலை செய்யும் பெண்கள் தாங்கள் வேலை செய்யும்பொழுது எள்ளுக்காயை தலையில் தேய்த்துக் கொண்டு வேலை முடிந்தவுடன் பக்கத்தில் இருக்கும் ஆறு அல்லது குளங்களில் தலையை அலசுவார்கள். இதனால் அவர்கள் முடி, எத்தனை வயதானாலும் பளபளப்பாகவும், கருமையாகவும் இருக்கும். இதன் மதிப்பு நகரத்தில் வாழ்பவர்களுக்குத் தெரியாமல் வண்ண வண்ண பேக்கிங்களில் பல பெரிய கம்பெனிகளின் ஹேர் ஆயில் மற்றும் கண்டிஷனர்களை உபயோகித்தாலும் பெரிய அளவில் பயன் கிடைப்பதில்லை.

இயற்கை நமக்கு எல்லாவித மருத்துவ குணங்களைக் கொண்ட மூலிகைகளை அளித்திருக்கிறது. அதை உபயோகிப்பதும், உதாசீனப்படுத்துவதும் நம்மிடம்தான் உள்ளது

மேலும் விவரங்கள் அறிய...

மூலிகை எண்ணெய் மற்றும் ஹெர்பல் தயாரிப்புகளைப் பெற...

திருமதி ராஜம்
நேச்சுரல் பிராடக்ட்
51, பெருமாள் கோயில் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015
போன் : 4852196.

Edited and Published by Pavithran from 8, East Mada Street, Villiwakkam, Chennai - 600 049 and Printed by S. Vijayakumar in Super Printing Press, 307, Poonamalli High Road, Aminjikarai, Chennai - 600 029.

